WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்



# AKARAM
# அகரம்

14.09.2017 - 13.10.2017

சுவடி: 6.05

திருவள்ளுவர் ஆண்டு 2048

ISSN 2195-6480




FREE CIRCULATION:

GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


DORTMUND நகரில்!
மளிகை உலகின்..
BIGG BOSS...
TKS BEST FOODS
வழங்கும்,
ஒரு நாள் மட்டும்..!
4th ANNIVERSARY CELEBRATIONS TKS
விழாக்கால பிரம்மாண்ட விற்பனை..!
07.10.2017 அன்று நீங்கள் நம்ப முடியாத மாபெரும் மலிவு
விற்பனையும் குலுக்கல் முறையிலான பரிசுப் பொருட்களும்...
100 euro விற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
குலுக்கல் முறையிலான பரிசுப் பொருட்கள்..!
இலங்கை-இந்தியாவுக்கான விமான பயணச்சீட்டு Gutschein ( Gultig bis 31.12.2018 )
1-ம் பரிசு..!
TKS BEST FOOD 300 euro பெறுமதியான Gutschein ( Gultig bis 31.06.2018 )
Gutschein
2-ம் பரிசு..!
STAR IMPEX Gutschein Gift Card
STAR IMPEX 150 euro பெறுமதியான Gutschein ( Gultig bis 31.06.2018 )
3-ம் பரிசு..!
ADCHAYA INTERNATIONAL 150 euro பெறுமதியான Gutschein ( Gultig bis 31.06.2018 )
4-ம் பரிசு..!
Ammas Food ன் ஒரு குடும்பத்துக்கான ஒருவேளை உணவுக்கான Gutschein ( Gultig bis 31.06.2018 )
GIFT VOUCHER Ammas food
5-ம் பரிசு..!
கொள்வனவுக்கான பரிசுப் பொருட்கள்..!
50 euro விற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு BOX அகர்பத்தி
100 euro விற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு புட்டுப்பானை
200 euro விற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு PURI PRESS
4 வது ஆண்டில் கால் பதிக்கும்...
TKS BEST FOODS
ONE DAY BIG SALE 07.10.2017
300 euro விற்கு மேற்பட்ட கொள்-வனவுக்கு ஒரு CHAPATHI MAKER அல்லது இட்லிச்சட்டி
400 euro விற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு 3 CUP MIXIE GRINDER
500 euro விற்கு மேற்பட்ட கொள்வனவுக்கு ஒரு 12 Ltr RICE COOKER
தள்ளுபடியிலும் தரம்...உங்க பட்ஜெட்டுக்குள்ளேயே SHOPPING...கூடவே
பரிசுப்பொருட்களையும் அள்ளிச் செல்லலாம்... வந்து பாருங்க, வியந்து போவீங்க...!
Rheinische Str. 79, 44137 Dortmund, Germany, Tel : 49 231 9504688
மலிவு விற்பனைக்கான விலைகள் 07.10.2017 அன்று காலையில் அறிவிக்கப்படும்!

புதிய வரவு

ஐரோப்பாவிற்க்கான புதிய சேவை

# ortel MOBILE







**19,99 €** [15) /4 Wochen

## ஒரே SIMல் இருந்து...

## 300 நிமிடங்கள் ஒரு மாதத்திற்கு பேசலாம்.

## 3GB இன்ரர்னெற்றும் பாவிக்கலாம்.

ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே 300 நிமிடங்கள் முடிந்தாலும்,

அதன் பிறகு 9 சென்ற் நிமிடத்திற்கு கணக்கிடப்படும்.

3GB முடிந்தால், மீண்டும் 9 யூரோவிற்கு பெறலாம்.

**19.99 யூரோவுக்கு ஐரோப்பாவின் எந்த நாட்டிலும் இருந்தபடி ஐரோப்பா முழுவதும்**




- 300 Minuten in Deutschland & in 50 weitere Länder
- Internet Flat 3 GB
- Surfen&Telefonieren in der EU
- On-Net Flat (deutschlandweite Nutzung)



# அகரம்


மாதாந்த இதழ் - Monthly Magazine

13. புரட்டாசி - 14. ஐப்பசி 2017
சுவடி / Issue: 6.05



தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)



தொடர்புகளுக்கு:
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 95 66 10
Email: *editor@akaram.eu*



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பர வள்ளல் பெருமக்களுக்கும் வணக்கம்.

ஈழத்திரு நாட்டின் தலை நகரான நல்லூர் பதி கொண்டிருக்கும் கந்த வேளின் திருவிழாக்களில் பெரு விழாவான தேர் திருவீதி உலா மிகப் பெரும் பக்தி அலையை ஏற்படுத்தி இருந்தது. முருகக் கடவுளுக்கே சிறப்பு விருப்பமான காவடி ஆட்டம் தமிழரின் பண்பாட்டு விழுமியத்தின் தலை சிறந்த நிகழ்வாகும்.

உலக வாழ்வில் தோல்விகளும் ஏமாற்றமும் அதிகமாகும் பொழுது கடவுள் பயமும் பக்தியும் எல்லை மீறிப் போவது மனித இயல்பாகும். குறிப்பாக இந்த முறை முதல் தடவையாக ஒருவர் துலாக் காவடியில் கத்திகளின் படுக்கையில் படுத்த படியே மேலும் கீழுமாக வேகமாக ஆடி அசைந்து அனைவரையும் ஆச்சரியத்திலும் பரவசத்திலும் மூழ்கடித்தார்.

மேலும் வழமைக்கு மாறாக இந்த வருடம் காவடிகளும் மக்கள் கூட்டமும் பேரலையாக திரண்டு எழுந்து காணப்பட்டது. ஒருவேளை தென்பகுதி பக்தர் வெள்ளமும் வேடிக்கை பார்க்க பங்கு பிடிக்க வந்திருக்குமோ தெரியவில்லை.

இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் இப்படி ஒரு வழிபாட்டு முறை தேவையா என்ற கேள்வி பலரிடம் எழலாம். என்ன செய்வது கின்னஸ் சாதனைகள் போல ஏதாவது செய்து காட்டி மற்றவர் கவனத்தை பெற்றுவிட வேண்டும் என்கிற ஆசை சிலருக்கு ஏற்படுவதுண்டு.

அதைப் போன்ற ஒரு திகில் ஆட்டத்தை இன்றைய நல்லாட்சி அரசின் எதிர்க் கட்சித் தலைவர் மீண்டும் மகிந்தரோடு தொடங்கி விட்டுள்ளார். மகிந்தர் ஜனாதிபதியாக இருந்த பொழுது இருபத்தைந்து நாட்களும் நல்லை கந்தனை இருபத்தைந்து தடவைகளுக்கு மேல் சுற்றி வந்து வரம் கேட்டுக் கிடைக்காத முருக பக்தனைப் போன்று இவரும் மீண்டும் மகிந்தர் வழிபாட்டில் இறங்கி விட்டார் என சினைக்கத் தோன்றுகின்றது.

அதிலும் புலிகளின் கொடுங்கோல் அடக்கு முறைக்குள்

தத்தளித்த தமிழ் மக்களை மீட்டு விடியலைத் தந்த மகிந்தர் ஒருவரால் மட்டுமே தமிழ் மக்களுக்கு வரம் கொடுக்க முடியும் என பெரும் பக்திப் பாமாலையே பாடி விட்டுள்ளார்.

எத்தனைதான் அடித்தாலும் தாங்குறானே இவன் இவ்வளவு நல்லவனாக இருக்கிறானே என அவரை வடிவேலுவின் பாணியில் மகிந்தர் பாராட்டி இருப்பாரோ என நினைக்கத் தோன்றுகிறது.

திருந்தாத உள்ளங்களை திட்டி என்ன ஆகப் போகிறது. குழந்தைகள் என்றால் சொல்லியோ அடித்தோ திருத்தி விடலாம். அதுக்கோ தள்ளாத வயது எமக்கோ பொல்லாத காலம் எல்லாம் விதி வரும் பொழுது நல்லது நடக்கட்டும் என நல்லைக் கந்தன் மேல் பழியைப் போடுவதே சரி எனப் படுகிறது.

அப்பப்போ கண்ணாடியில் உள்ள தூசியைத் துடைப்பது போல அரசுக்கு எதிராக யாரிடமாவது புகார் சொல்லித் தப்பிப்பது போல யாராவது துக்கம் கேட்டுப் போக வந்த பேர்களிடம் எவரது மனமும் நோகாத படிக்கு ஒரு கோரிக்கை அல்லது முறைப்பாடு சொல்லிவிட்டு எல்லாம் சரிப்படும் என நம்புகிறோம் மக்களே நீங்களும் நம்புங்கள் என்று பேசும் நம்பூதிரிகளை எமது பிரதிநிதிகளாக தெரிவு செய்து விட்டோம்.

எனவே நாளை நம் சந்ததி நாடும் வீடும் பேரும் தொலைந்து நல்லபடியாக வாழும் என்று நாமும் நம்புவோம்.

அன்புடன்,

அகரம் குழுமம்.


NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா? பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா? நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா? எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்!




திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்!

நிழல்படம் மற்றும் விடியோ!

விநியோகம் மற்றும் பரிமாற்றம்!

**Kontakt: Siemensstr. 25, 40721 Hilden**



**Rufen Sie uns an:**


**Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955**



த. தெர்மன்னசிங்கம்

# ஈழத் தமிழ் மக்கள் இந்திய நாட்டின் அடிமைகளா?

இன்று குறிப்பாக வட பகுதி தமிழ் மக்கள் இந்தியாவின் விசேட கவனிப்பை பெற்று வருகிறார்கள். முன்னாள் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் அறிவித்த ஒரு இலட்சம் வீடுகள் என்ற போர் வெற்றி நன்கொடை அறிவிப்பு இன்னமும் காற்றிலே காட்சி அளிக்கிறது. அன்று யாழ் மக்களை எட்டிக் கூடப் பார்க்க முடியாத அந்தப் பரமாத்மா பதவி இழந்து புதிய இரட்சகராக வந்து பொங்கல் கொண்டாடி கீரிமலை நகுலேஸ்வர பெருமானை வழிபட்டுப் போன நரேந்திர மோடி அந்த வாக்குறுதியில் பத்தில் ஒரு பங்கைத்தானும் வழங்கி போரினால் தமது இருப்பிடங்களை இழந்த தமிழ் மக்களின் வாயில் பாலை வார்ப்பார் என எழுதியும் பேசியும் வந்த ஏமாளிகள் எம்மிடையே இலட்சக் கணக்கில் உள்ளனர்.



Disaster Relief Camps

இன்று அவை ஒட்டு வீடுகளா ஓட்டு வீடுகளா என்ற பட்டி மன்ற விவாதப் பொருளாகி எட்டாத கொம்புத் தேனாக இனிக்கிறது. அதிலும் இந்தியாவில் இயங்கும் பன்னாட்டு நிறுவனமே பணம் பண்ண வேண்டும் என்று எமது மலைநாட்டு அமைச்சர் சுவாமிநாதன் உறுதியாக இருக்கிறார்.

அவரது புதிய அறிவித்தல் மூலம் வடக்கு கிழக்கு மக்களுக்கு 1,60,000 வீடுகள் தேவை உள்ளது என்று வட கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்புவதே தமது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார். மலையக மக்களுக்கு லயன்கள் எனப்படும் மாட்டுத் தொழுவங்கள் பெற்றே கொடுக்க முடியாத இவர் இப்படி ஒரு வாமனா அவதாரம் எடுப்பது வேடிக்கைதான்.

**தமிழ் மக்களுக்கு வீடுகள் கிடைக்கிறதோ இல்லையோ தரகுக் கூலி மட்டும் சம்பந்தப் பட்ட அத்தனை பேருக்கும் தவறாமல் கிடைத்துவிடும் என உறுதியாக நம்பலாம்.**

நம்பிக்கை என்பதும் இந்தியா பற்றிய ஒரு பிரபலமான பிரச்சார சுலோகம் நினைவுக்கு வருகிறது. ஆங்கிலத்தில் நம்பகத் தன்மையைக் குறிக்கும் சொல் கிறெ டிபி லிற்றி (Credibility) என்கிற சொல்லாகும். இச் சொல்லுக்கு இன் என்ற முன்னொட்டை இணைத்து விட்டால் நம்பகத் தன்மை அற்றது எனவும் பிரமிப்பு ஊட்டும் என்றும் பொருள் கொள்ள முடியும்;.




இப்பொழுது இந்திய பிரச்சார ஊடகங்களில் இந்தியாவை Incredible India எனக் குறிப்பிடும் பொழுது அதற்கு நம்பகத் தன்மை அற்ற இந்தியா என்பதா? அல்லது பிரமிப்பூட்டும் இந்தியா எனக் கருதுவதா என்பதை

வாசகரே இக் கட்டுரையை முழுமையாகப் படித்த பின்னர் முடிவு செய்யலாம்.

சிங்கள மக்களோ ஆட்சியாளரோ எக்காலத்திலும் இந்தியாவின் மீது நம்பிக்கை வைத்தது கிடையாது. இனிமேலும் வைக்கப் போவதும் இல்லை. ஆனால் தமிழ் மக்கள்தான் காந்தி நேரு இந்திரா சுபாஸ் சந்திர போஸ், கருணாநிதி மற்றும் தமிழ் சினிமா நட்சத்திரங்களின் பெயரை பிள்ளைகளுக்கு வைத்து ஏதோ எல்லாம் தெரிந்தவர் போலக் காட்டி தமது பூர்வீகத்தையும் பெருமைகளையும் இழந்து சின்னத் தனமாகப் பெருமை பேசுவர்.

அப்படித்தான் எமது அரசியல் கட்சித் தலைவர்களும் கொழும்பிலே காத்தடிச்சால் சென்னையிலே ஒளித்திருந்து வாய்ச்சவால் அறிக்கை விட்டு தம்மையும் தமிழ் மக்களையும் இந்திய அரசியல் வாதிகளின் சூழ்ச்சியில் சிக்க வைத்தனர். நேருவோ இந்திரா காந்தியோ ராஜீவ் காந்தியோ அவரது மனைவி சோனியாவோ எக்காலத்திலும் தமிழ் மக்களை ஒரு பொருட்டாகக் கருதியதே கிடையாது.

இந்தப் பாரம்பரியத்தில் வந்துள்ள நரேந்திர மோடியோ அல்லது அவருக்குப் பின்னால் எவர் ஆட்சியில் அமர்ந்தாலும் ஈழத் தமிழருக்கு மட்டும் அல்ல தமிழ் நாட்டுத் தமிழருக்கே நல்லது செய்வதும் இல்லை இனிமேல் செய்யப் போவதும் இல்லை என்பதை இன்றைய தமிழக தமிழர் நிலை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. பானையில் இருக்க வேண்டும் அகப்பை பிடிப்பவனும் தன் ஆளாக இருந்தால் மட்டுமே பந்தியில் இருப்பதால் பயன் ஏதாவது இருக்கும். இவை இரண்டுமே இல்லாத இன்றைய நிலையிலும் சம்பந்தன் சுமந்திரன் மாவை போன்ற அரசியல் நிபுணர்கள் காங்கேயன் காளை மாட்டில் பால் கறப்போம் என பேசி வருகிறார்கள்.

இந்திய அரசு அப்பொழுது ஒரு மிகப் பெரிய ஆழுமையும் அதிகார வெறியும் ஆக்கிரமிப்பு குணமும் கொண்டவர்களின் கைகளில் பெரும்பான்மைப் பலம் கொண்ட ஒன்றாக இருக்கிறது. போர் முடிந்த பின்னர் படிப் படியாக சிங்களத்தை அதிகாரம் செய்யும் போக்கை கடைப்பிடித்து வருகிறது.

கொழும்பிலும் மலையகத் தமிழர் நலன் கருதி கண்டியிலும் மட்டுமே கிளைகளை கொண்டிருந்த இந்தியத் தூதரகம் யாழ்ப்பாணத்தில் அலுவலகத்தை தொடங்கிய நாளில் இருந்து தமிழ் மக்கள் மீது நாட்டாமை செய்வதும் சமூக சீர்குலைவுகளை ஏற்படுத்துவதும் ஊக்கப் படுத்துவதும் குறிப்பாக உளவாளிகளையும் கேரளத்துக் கஞ்சா மற்றும் பாலியல் சுற்றுலாக்கள் மூலம் பெண்கள் விபச்சாரம் இடம்பெறவும் முக்கிய மையமாக இத்துணை தூதரகம் விளங்குவதாகச் செய்திகள் பெருகி வருகின்றன.

இவற்றுடன் தனது அமைதிப் படை செய்த தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த அனைத்ததுக் கொடுமைகளையும் குழி தோண்டிப் புதைக்கும் செயலாக மரணித்த இந்தியப் படை வீரர்களின் நினைவு இடங்களை சீரமைப்பதும் அவற்றை எமது மக்களையே ஏற்றிப் போற்ற வைப்பதன் மூலம் சிங்கள அரசைத் திருப்தி செய்யவும் தனது நாட்டாண்மையை நிலை நிறுத்தவும் இந்தப் பயணத்தை இந்திய படைத் தளபதி பயன் படுத்தியதாகத் தெரிகிறது.

விரைவில் எமது மக்கள் இலங்கையின் தேசிய கீதத்துடன் ஜன கண மன என்ற இந்திய தேசிய கீதத்தையும் பாட வைக்கும் விழாக்கள் உருவாக்கப்படும். அவற்றை ஒழுங்கு செய்யப் பணமும் பினாமிகளும் எப்போதும் தயார் நிலையில் இருக்கும்.

மீண்டும் 1987 காலப் பகுதியை நினைத்துப் பார்ப்பது அவசியமாகிறது. 1980 முதலே எங்கள் அரசியல் தலைவர்களும் விடுதலை இயக்க இளைஞர்களும் இந்தியாவின் கைப் பாவைகளாகி விட்டனர். 1983 கறுப்பு ஜுலைக் தாக்குதலுக்கு ஓடித் தமிழகத்தில் தஞ்சம் புகுந்த தலைவர்களுக்கு தனியான இலவச வீடுகளும் அரச வசதிகளும் இன்று வரையும் கிடைக்கிறது.

ஆனால் அகதிகளாக உயிருக்கு பாது காப்புத் தேடி ஓடிய இலட்சக் கணக்கான மக்களுக்கு ஐ.நா. விதிகளுக்கு அமைவான தஞ்சம் கிடையாது. யாரும் புக முடியாத முகாம்களில் அடிப்படை வசதிகளோ வேலை வாய்ப்புகளோ மறுக்கப் பட்டு 30 வருடங்களாக அவதி உறும் அப்பாவி மக்களுக்கு எமது அரசியல் தலைவர்கள் என்ன பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்? இதுதான் தாயக சேயக தொப்புழ் கொடி உறவு என்பதின் அர்த்தமா?

இலங்கை இராணுவம் ஒப்பரேஷன் லிபரேசன் என்ற பாரிய இராணுவத் தாக்குதல் மூலம் வடமராட்சிப் பகுதியை விமானக் குண்டு வீச்சுகள் நடத்தி நெல்லியடி மகா வித்தியாலயத்தில் பாரிய இராணுவ முகாம் அமைத்து தமிழினத்தை அடிமைப் படுத்திவிட முயன்றது.

அத்தகைய நெருக்கடி மிக்க நிலையிலும் இந்தியா பார்த்தே இருந்தது. ஆனால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தமது போரைக் கைவிடாது தாக்குதலைச் செய்த முதல் தற்கொலைப் படை வீரன் கப்டன் மில்லர் வெடி மருந்துகள் ஏற்றிய பார ஊர்தியுடன் சென்று முகாமைத் தகர்த்தான். ஆடிப் போன இலங்கை அரசு ஓடி முழித்தது இந்திய அரசு. இப்படியே விட்டால்

தன்னை மீறி தமிழினம் விடுதலை பெற்றுவிடும் அல்லது ஜே.ஆர். அமெரிக்காவை அழைத்து விடுவார் அதற்கு முன்னரே தான் முந்திவிட நினைத்து மேற் கொண்டதே பூமாலை என்ற அதன் நடவடிக்கை.

பருப்பும் அரிசியும் எண்ணெயும் விமானங்கள் மூலம் அத்து மீறி நுழைந்து தனது மனிதாபிமானத்தை வெளிப்படுத்திய பின்னர் நமது மக்களும் வந்தது வாழ்த்தரிசி அல்ல வாய்க் கரிசியே என்பதை இன்றும் கூட உணர மறுக்கும் பிறவிகளை எப்படி அழைக்கலாம் என்பதை அவரவர் அறிவு முடிவு செய்யட்டும். ஜே.ஆரொடு ஒப்பந்தம் அதன் பின்னர் ஒருவர் பின் ஒருவராய் இந்திய வெளியுறவுத் துறை தமிழ் செயலர்கள் வெளியேற்றம். சிங்களத்தின் தேவைக்கு ரொமேஷ் பண்டாரி என்ற ஊழல் அதிகாரியின் வரவு இந்திய அமைதி காக்கும் படை தரை இறக்கம். ஏமாந்த மக்களும் அதிகாரிகளும் பூமாலை மேளதாள வரவேற்புகள்.

ஒக்டோபர் 10ந் திகதி விடுதலைப் பலிகள் மீது இந்திய இராணுவம் அதிகார பூர்வ தாக்குதலை யாழ் பல்கலைக் கழக வளாகத்தில் வான் படையினரின் தரை இறக்கத்துடன் தொடங்கியது. அமைதிப் படை ஆக்கிரமிப்புப் படையாக மாறியதா அல்லது அமைதிப் படை வேடம் கலைந்ததா என்பதை உலகம் அறியும் முன்னமே யாழ் மாவட்டமே இரத்த ஆற்றில் மிதந்தது.

இந்திய அமைதிப் படையின் சீக்கிய படை அணி யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களும் பணியாளர்களும் நோயாளிகளுமாக தீபாவளி நாளின்; சிறப்பு பட்டி மன்றம் போல் ஒரே நாளில் அங்கே மட்டும் 150க்கும் அதிகமான அப்பாவிப் பொது மக்களை கொன்று குவித்தது. அவர்கள் எவரிடமும் எந்த வித ஆயுதமோ போராட்ட எண்ணமோ இருக்க வில்லை. இந்திய அமைதிப் (?) படையின் கொலை வெறி 1990ல் வெளியேறும் வரை தொடரந்தது. இவர்களின் முகாம்கள் எல்லாம் அப்பாவி மக்களின் கொலைக் களங்களாக விளங்கின. அதன் பின்னிணைப்பாக இந்திய இராணுவம் நடத்தியதுதான் ஆனந்த புரம் மற்றும் முள்ளி வாய்க்கால் தமிழினப் படு கொலைகள்.

1989ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2ம்; திகதி முதல் 3 நாட்களில் இந்திய அமைதிப் படையின் சீக்கிய கறுப்புப் பூனை மற்றும் குர்க்கா படையணி வல்வெட்டித் துறையில் நடத்திய சுற்றி வளைப்புத் தேடுதலில் 30க்கும் மேற்பட்ட பெண்களை கற்பழித்தது உட்பட 63 பொது மக்களை சுட்டுக் கொன்றதின் நினைவாக தீருவில் மயானத்தில் புலிகளால் தாமரை மலர் வடிவில் அமைக்கப் பட்ட நினைவுச் சின்னத்தை இலங்கை இராணுவம் 2010ல் உடைத்து அழித்தது.

எங்களின் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று எமது மக்களின் அழிக்கப் பட்ட நினைவகத்திலிருந்து 400 மீற்றர் தூரமே உள்ள இடத்தில் இன்று இந்திய இராணுவத் தளபதி எமது விடுதலைப் போரில் புலிகளால் கொல்லப் பட்ட இந்திய அமைதிப் படையின் சமாதி எழுப்பி மரியாதை செய்திருக்கிறார்.30 வருடங்களாக புரையோடிக் கிடந்த எமது காயங்களை இந் நிகழ்வு மீண்டும் தோண்டிக் குருதி சிந்த வைத்துள்ளது.



தனது அமைதிப் படை செய்த தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த அனைத்ததுக் கொடுமைகளையும் குழி தோண்டிப் புதைக்கும் செயலாக மரணித்த இந்தியப் படை வீரர்களின் நினைவு இடங்களை சீரமைப்பதும் அவற்றை எமது மக்களே ஏற்றிப் போற்ற வைப்பதன் மூலம் சிங்கள அரசைத் திருப்தி செய்யவும் இந்தப் பயணத்தை இந்திய படைத் தளபதி பயன்படுத்தவே இப்படியான சந்திப்பும் கோரிக்கையும் இடம் பெற்றன என்பதற்கு கோப்பாயில் இடம் பெற்ற தளபதியின் நிகழ்வுக் காட்சி இதோ!



இந்தியத் துணைத் தூதர் தம்பதி சமேதராய் நயினா தீவு புத்த விகாரை தரிசனம் செய்யதை முன்னர் செய்தி விமர்சனமாகத் தந்தோம். இப்பொழுது மேலும் வெளியாகும் செய்திகளின் படி யாழ் செய்தி ஊடகங்களை தமது கட்டுப் பாட்டுக்குள் செயற்பட வற்புறுத்துவதாகவும் தமது பினாமிகளுக்குப் பணம் கொடுத்து புதிய பத்திரிகைகள் கொழும்பு மைய அரசியலை ஆதரித்தும் தமிழ் தேசிய உணர்வையும் தமிழக ஆதரவையும் சிதைக்கும் வகையிலும் செயற்பட வைக்கப் படுகின்றனர் என்ற செய்தியும் வெளியாகி உள்ளது. சென்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பவராக இவர் செயற்பட்டார் என்ற செய்திகளையும் படித்தோம்.



GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45   058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch

076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**

வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**

சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**

உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**

சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**

ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**

அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்



### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**

உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

சண் தவராஜா



# கிழக்கு மாகாணசபைத் தேர்தல் — தேவை தமிழ் முதலமைச்சரா, இன ஐக்கியமா?

கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலம் செப்டெம்பர் மாதத்துடன் முடிவடைய உள்ள நிலையில் ஆட்சியைக் கைப்பற்றுவது தொடர்பாக அரசியல் கட்சிகள் பலவும் கணக்குப் போட ஆரம்பித்துள்ளன. மூவின மக்களும் ஏறக்குறைய சரிசமமாக வாழும் இந்த மாகாணத்தில் கூட்டாட்சியே சாத்தியமாக உள்ள நிலையில் முதலமைச்சர் ஆசனத்தில் யார் அமர்வது என்ற விவாதம் பல மாதங்களுக்கு முன்னரேயே ஆரம்பித்து விட்டது. தமிழ் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைக் கொண்ட கட்சியாகத் திகழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைக் கொண்ட கட்சியாகத் திகழும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து தற்போதைய மாகாண சபையில் ஆட்சி நடாத்தி வரும் நிலையில், இந்தக் கூட்டணி தேர்தலின் பின்னரும் தொடருமா, தொடருமாயின் முதலமைச்சராக தமிழர் ஒருவர் இருப்பாரா என்கின்ற கேள்விகள் எழுப்பப் படுகின்றன.

தற்போதைய முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், முஸ்லிம்களின் முதலமைச்சராகச் செயற்படுகின்றாரே அன்றி ஒட்டு மொத்த மாகாணத்தின் முதலமைச்சராகச் செயற்படவில்லை எனத் தெரிவிக்கும் தீவிர தமிழ்த் தேசியவாதிகள், அடுத்த முதலமைச்சராகத் தமிழர் ஒருவரே பதவி வகிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இவர்களுள் ஒருசிலர் ஒருபடி மேலே சென்று பச்சை இனவாதத்தையும் கக்கி வருகின்றனர்.

தமிழ்ச் தேசியவாதிகளின் இத்தகைய உணர்ச்சிக் கருத்துக்கள் தமிழ் முஸ்லிம் இனங்கள் மத்தியில் உள்ள இன நல்லுறவைக் குலைக்க முயல்வதாகக் குற்றஞ் சாட்டும் நடுநிலையாளர்கள், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையேயான இணைப்பு என்ற நீண்டநாள் இலக்கை எட்டுவதற்கு தமிழ் முஸ்லிம் இனங்களுக்கு இடையேயான நல்லுறவு அவசியம் எனத் தெரிவித்து வருகின்றனர். அதற்காக முதலமைச்சர் பதவி மாத்திரமன்றி வேறு எதுவாக இருந்தாலும் அத்தகைய விட்டுக் கொடுப்பைச் செய்தே ஆக வேண்டும் என்னும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். எனினும், தேர்தலுக்குத் தேர்தல் தமிழ்த் தேசியக் கருத்துக்களை விதைத்து வாக்குகளை அறுவடை செய்யும் தந்திரத்தைக் கடைப்பிடித்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதைய நிலையை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பது புதிராக உள்ளது.

தற்போதைய மாகாண சபையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுடன் சேர்ந்து ஆட்சியமைப்பது என்னும் முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்தமைக்கு ஆழமான காரணங்கள் இருந்தன.

37 உறுப்பினர்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் அதிக ஆசனங்களைக் கொண்ட கட்சியாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி உள்ளது. இந்தக் கட்சியில் இரண்டு தமிழர்கள் உட்பட 14 அங்கத்தவர்கள் உள்ளனர். 11 ஆசனங்களைக் கொண்ட இரண்டாவது பெரிய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. 7 ஆசனங்களுடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும், மூன்று ஆசனங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் உள்ளன. தேசிய சுதந்திர முன்னணி

ஒரு ஆசனத்தைக் கொண்டுள்ளது.

2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி 200,044 வாக்குகளைப் பெற்று 12 ஆசனங்களையும் 2 மேலதிக ஆசனங்களையும் பெற்றிருந்தது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முதல் தடவையாகக் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 193,827 வாக்குகளைப் பெற்று 11 ஆசனங்களைக் கைப்பற்றியது. 6217 வாக்குகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 மேலதிக ஆசனங்களை இழக்க நேரிட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியில் இணைந்து கொள்ள, மாகாண சபை முதலமைச்சராக எம்.என். அப்துல் மஜீத் பதவியேற்றார். செப்டெம்பர் 2012 முதல் பெப்ரவரி 2015 வரை அவர் முதலமைச்சராகத் தொடர்ந்தார்.

மகிந்த ராஜபக்ஷவைப் பதவியில் இருந்து அகற்றும் நோக்கோடு இலங்கையில் உள்ள கட்சிகள் செயற்பட்டு தமது இலக்கை எட்டி, 2015 முற்பகுதியில் தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கிக் கொண்ட சூழ்நிலையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியில் ஏற்பட்ட பிளவு கிழக்கு மாகாண சபையிலும் எதிரொலித்தது. இந்நிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கின.

இத்தகைய முடிவு எட்டப்பட்ட காலகட்டம் மிக முக்கியமானது. அசைக்க முடியாத ஒருநபர் எனக் கருதப்பட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட தேர்தல் தோல்வி, தேசிய அரசாங்கம் என்ற இலங்கைக்குப் புதுமையான ஒரு கருத்துடன் பிரதான கட்சிகள் களமிறங்கியமை, சிறுபான்மை மக்களின் ஆதரவோடு மகிந்த தோற்கடிக்கப்பட்டமை, அனைத்துக்கும் மேலாக தீவிர இனவாதச் சிந்தனை கொண்ட மகிந்த குழுமம் மீண்டும் மீள் எழுச்சி கொள்ள அனுமதிக்கக் கூடாது என்ற மனோநிலை பொது மக்கள் மத்தியில் நிலவியமை போன்றவையே அன்றைய நிலையில் மாகாண சபையில் குறைந்த இடங்களையே கொண்டிருந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கக் காரணம்.

அத்தோடு, புதிதாக உருவான தேசிய நல்லிணக்க அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றை அறிமுகம் செய்ய உள்ள நிலையில் தமது உரிமைகளை இணைந்து வலியுறுத்தும் நோக்குடன் சிறுபான்மைக் கட்சிகள் என்ற அடிப்படையில் முஸ்லிம்களின் பிரதான அரசியல் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுடன் நல்லுறவைப் பேண வேண்டிய அவசியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உணர்ந்திருந்த நிலையிலேயே அன்றைய ஆட்சியமைப்பு நிகழ்ந்தது.

அத்தகைய முடிவு ஒன்றை எடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்று கவனத்தில் கொண்ட அனைத்து அம்சங்களும் இன்றைய காலகட்டத்திலும் கூட பொருந்தத் தக்கவையாகவே உள்ளன. அதேவேளை, இரண்டாவது கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலம் முழுமையுமே மாறி மாறி முஸ்லிம் முதலமைச்சர்கள் கையிலேயே கழிந்து விட்டது, இந்நிலையில் தமிழ் முதலமைச்சர் ஒருவர் அந்தக் கதிரையை அலங்கரிக்க வேண்டும் என்று கோருவதில் உள்ள யதார்த்தத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

கள நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையுடன் தேர்தலைச் சந்திக்குமாயின் அதுவே பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இரண்டு மேலதிக ஆசனங்களைப் பெறும் வாய்ப்பு உள்ளது. ஆனால், வடக்கு மாகாண சபையின் இன்று நிலவும் சூழல் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் கேள்விக்கு இலக்காக்கி உள்ளமையை மறுத்துவிட முடியாது.

கடந்தமுறை நடைபெற்ற தேர்தலில் மூன்று மாவட்டங்களிலும் 65.67 வீதமானோரே வாக்களித்து இருந்தனர். இந்தத் தொகை இம்முறை 70 விதம்வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம். கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பில் 50.83 வீத வாக்குகளையும், திருமலை மாவட்டத்தில் 29.08 வீத வாக்குகளையும். அம்பாறையில் 16.28 வீத வாக்குகளையும் பெற்றிருந்தது. இயல்பான சூழலில் தேர்தல் என்பதை விட, 2004 ஆம் ஆண்டில் இருந்ததைப் போன்று கூட்டமைப்பு அபரிமிதமான அதிகரிப்புடன் வாக்குகளைப் பெறும் என்ற சூழல் இன்று இல்லை. எனினும், கடந்தமுறை அதிக வாக்குகளைப் பெற்றிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி தற்போது பிளவுபட்டு உள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெறுவதற்கான வாய்ப்பே அதிகமாக உள்ளது.

37 ஆசனங்களைக் கொண்ட மாகாண சபையில் 19 ஆசனங்களைப் பெற்றால் மாத்திரமே ஒரு கட்சியால் தனித்து ஆட்சியமைக்க முடியும். முஸ்லிம் கட்சியுடனோ அன்றி ஏதாவதொரு தேசியக் கட்சியுடனோ கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும். ஆனால், அத்தகைய ஒரு கூட்டணிக்கான வாய்ப்பு கூட்டமைப்பைப் பொறுத்தவரை தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தலுக்குப் பிந்திய சூழலில் முஸ்லிம்களை ஒதுக்கி விட்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைக்கலாம் என்பது ஒரு சாராரின் கருத்தாக உள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக

ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ள போதிலும், இத்தகைய உத்தேசக் கூட்டு என்பது வெறுமனே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு உத்தியாகவே கருதப்படும் அபாயம் உள்ளது. அதேவேளை, தமிழ்த் தரப்பின் மீது அவநம்பிக்கை கொண்டுள்ள முஸ்லிம்களை தமிழ் மக்களிடம் இருந்து மேலும் விலகிச் செல்லவே இது உதவும்.

எனவே, அடுத்து அமையப் போகும் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் இணைந்த ஒன்றாகவே அமையலாம் என ஊகிக்கலாம். இத்தகைய நிலையில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவதற்கான வாய்ப்பும் இருக்கிறது.

ஆனால், முதலமைச்சர் நாற்காலியை முஸ்லிம் காங்கிரசோ அல்லது ஏனைய கட்சிகள் மூலம் தெரிவு செய்யப்படும் முஸ்லிம்களோ விட்டுக் கொடுப்பார்களா என்ற கேள்வி எழுகிறது. முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக இருக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரசும், ஏனைய கட்சிகளில் போட்டியிட்டு வெற்றிபெறக் கூடிய முஸ்லிம் பிரதிநிதிகளும் நினைத்தால் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக ஆக்குவதற்கு அவர்களால் முடியக் கூடும்.

இன்றைய நிலையில் மத்தியில் தேசிய அரசாங்கம் உள்ள நிலையில் இலங்கையின் இருபெரும் அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் போட்டிக் கட்சிகளாக இல்லாத நிலை உள்ளது. எனவே, முஸ்லிம் காங்கிரஸ் இத்தகைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியை அமைப்பதற்கான வாய்ப்பை மறுதலிக்க முடியாது.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டால் தனித்தே மாகாண சபையைக் கைப்பற்றி விடலாம் என ஒருசிலர் கருதுகின்றனர். விகிதாசாரத் தேர்தல் முறைமையில் இது பெரும்பாலும் சாத்தியமற்றது. மூன்று மாவட்டங்களிலும் உள்ள ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒரே கட்சிக்கு வாக்களித்து, அக்கட்சி அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 40 வீதத்திற்கு மேல் பெற்றாலேயே இது சாத்தியமாகும். அத்தகைய ஒரு நிலையைக் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாது.

மறுபுறம், தமிழ்க் கட்சிகளிடையே இணைப்பு என்பதுவும் சாத்தியமில்லை. மாகாண சபை முறைமையை ஏற்றுக் கொள்ளாத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலில் நேரடியாகப் பங்கேற்காது என எதிர்பார்க்கப் படுகின்றது. மாறாக, சுயேட்சைக் குழுவாகக் களமிறங்கினாலும் கூட தனது பரம வைரியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே செயற்படும் என நம்பலாம். பிள்ளையான் மற்றும் கருணா தலைமையிலான உதிரிக் கட்சிகளுடன் கை கோர்ப்பது என்பது கூட்டமைப்பின் வாக்குகளை அதிகரிக்க எந்த வகையிலும் உதவாது. மாறாக அத்தகைய ஒரு செயல் கூட்டமைப்பின் வாக்குகளைக் குறைக்கவே உதவும். அது மாத்திரமன்றி, தமிழ்த் தேசியப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டவர்களோடு கை கோர்ப்பது என்பது – தேர்தல் நேரங்களில் தமிழ்த் தேசியம் பேசும் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தார்மீக அடிப்படையிலும் ஒத்துவராத ஒரு விடயமே.

எனவே, தேர்தலில் கடந்த முறை போட்டியிட்ட கட்சிகள் இம்முறையும் அதே அணிகளிலேயே போட்டியிடும் என எதிர்பார்க்கலாம். அதன் பின்னான சூழ்நிலையில் இன்று இருப்பதைப் போன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

எனினும், முஸ்லிம் முதலமைச்சர் என்ற அடிப்படையில் தமிழ் முஸ்லிம் ஐக்கியம் என்பதைத் தள்ளி வைத்துவிட்டு – முஸ்லிம் காங்கிரஸ் சிந்திக்குமானால் தேசிய அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளோடு இணைந்து ஆட்சியமைக்க முன்வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

தேர்தல் அரசியலைப் பொறுத்தவரை எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம். எனவே, அடுத்து என்ன நடக்கும் என்பதை தேர்தல் அறிவிக்கப்படும் வரை சரியாக எதிர்வு கூறுதல் கடினமே.

ஜேர்மனியில் தரம், உத்தரவாத்துடன் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழர் நிறுவனம்.

**R. Ragunathan**
Parkhof Str. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81

**ஆசியா சமுத்திரம்**
Sittard Str. 21
41061 Mönchengladbach
Tel: 02161 9028388
Fax: 02161 9028399

TJB BROTHERS

SUN TV மற்றும் VIJAY TVயின் விநியோகிஸ்தர்

VIJAY

Bank Details: R.Ragunathan
IBAN: DE55 3907 0024 0474 1153 00 | BIC: DEUT DE DB 390

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கான ஒரே இடம்

044 803 47 47
078 300 90 90



- Airport Transfer
- VIP Service
- Limousine
- Reisebusse
- Kleinbusse
- Gruppen-Transfer

SWISS RENT A CAR
SRAC

**Swiss Rent a Car GmbH**
Schaffhauserstrasse 137
8302 Kloten

www.swissrentacar.ch



அனைத்து வாகனத் திருத்த வேலைகளுக்குமான ஒரே இடம்

Reifenwechsel
Auto Diagnostik
Karosserie
Klimaservice
MFK Bereitstellung
Bremse und Stossstange
Autoradio Montage
Reinigung und Polieren
Sonstige Reparaturen
Ersatzwagen

KGS

Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02

டோட்முண்ட் மாநகரில்

# AMMA's food

Sri Lankan & South Indian Specialities



வெள்ளிக்கிழமை அறுசுவையுடன் மரக்கறிச் சாப்பாடு
மற்றும் பாலப்பம், சனிக்கிழமை ஸ்பெஷல் பிரியாணி
மற்றும் பாலப்பம் இன்னும் பற்பல...



அமைதியாகவும் ஆனந்தமாகவும் பிரியாணி
கொத்துறொட்டி, பிட்டுக் கொத்து, இடியப்பக்கொத்து,
தோசை, இட்லி, மசாலாத்தோசை மற்றும் பாலப்பம்
போன்ற உணவுகளுடன் நீங்கள் விரும்பிய வகையிலும்
உணவுகளை உண்டு மகிழ்ந்திட...





## அம்மா'ஸ் உணவகம்


**Rheinische Str. 80,**
**44137 Dortmund**

**Tel.: 0231-33898691 | Fax: 0231-33898693**
**Web: www. ammas-food.de**
**Mail: info@ammas-food.de**

*Öffnungszeiten:*
*Mo. - Do.: 11:30 - 22:30*
*Di.: Geschlossen*
*Fr. & Sa. 11:30 - 23:00*
*So. & Feiertag: 15:00 - 22:30*




**உங்கள் இல்ல வைபவங்களுக்கும் உணவு தயாரித்துப் பரிமாறக் காத்திருக்கின்றோம்!**



# தமிழர் தலைமைக்கு தெரியாதா? வடமாகாண முதலமைச்சர் சொல்லவா வேண்டும் ?

ஐக்கிய நாடுகளுக்கான வதிவிட இணைப்பாளர் ஊனா மெக்கேலேயிடம் வட மாகாண முதலமைச்சர் இராணுவம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வரை இன்னமும் வட பகுதியில் நிலை கொண்டுள்ளனர். அவர்கள் தமிழ் மக்களின் காணிகள், கட்டிடங்கள் மற்றும் இயற்கை வளங்களையும் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் முறைப்பாடு செய்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றனர்.

மேலும் இராணுவத்தினர் சிங்கள மீனவ மக்களை அழைத்து வருவதோடு அந்த மீனவர்கள் சட்ட விரோத மீன் பிடியிலும் ஈடுபடுகின்றனர், அதன் காரணமாக வட மாகாண மீனவ சமுதாயத்தினர் அச்சமடைந்து காணப் படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இவை எதுவும் தமிழர் தலைமையான த.தே.கூட்டமைப்புக்கும் அதன் உத்தியோகப் பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனுக்கும் தெரியாதா? முதலமைச்சர் குறிப்பிட்ட அத்தனை விடயங்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இன்னமும் இருப்பதாகவே தெரிகிறது. எனவே அவை பற்றிப் பேசவும் தீர்வு காணவும் மத்திய அரசில் பதவி வகிக்கும் தலைமையும் த.தே.கூட்டமைப்புக் கட்சி மட்டுமே அதிகாரம் கொண்டவையாக உள்ளன.

போர் நிறுத்தி பல தேர்தல்களையும் நடத்தி நல்லாட்சி அரசை அமைக்கப் பெரும் பங்களிப்புச் செய்தது அதனால் பதவிக்கு வந்த முதலமைச்சர் எப்படிப் பேசலாம் என்ற வாதத்தைப் பல தரப்பாலும் முதலமைச்சருக்கு எதிராக எழுப்பப் பட்டு வருவதை யாவரும் அறிவர். இதனை மாண்பு மிகு முதலமைச்சர் கருத்தில் கொண்டு இனிமேல் இத்தகைய மத்திய அரசு தொடர்பான விடயங்களை தமிழர் தலைவர்கள் கவனத்தில் எடுக்க மறுக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டை தமிழ் மக்களின் அரங்குகளில் பகிரங்கமாக வைக்க வேண்டும்.வட மாகாண சபையும் அதன் முதல்வரும் கையாலாகாதவர்கள் என்ற பழியைப் போடும் அனைவருக்கும் இத்தகைய செயற்பாடுகள் ஒரு படிப்பினையாகவும் இருக்கும்.

எதற்கும் முன்னேற்பாடாக இக் குறைபாடுகளையும் மக்களின் கரிசனைகளையும் பகிரங்கமாக கூட்டமைப்புக்கு பகிரங்க ஊடக வேண்டு கோள் மூலம் தெரியப் படுத்துவது உசிதமாக இருக்கும். அரசபோகத்தில் ஆனந்தம் காணும் எங்கள் தியாகச் செம்மல்களுக்கு நாட்டு நிலவரமும் மக்கள் துக்க துயரங்களும் தெரியாமல் போகும் வாய்ப்புகள் உண்டு. அதற்கு அனுசரணையாக முதலமைச்சர் செயற்பட வேண்டுமென விரும்புகிறோம்.

IMPORTAS
Cash & Carry

# Cash & Carry in Zurich

## Biggest Asian Shop in Swiss




## IMPORTAS CASH & CARRY

Basler Str. 102, 8048 Zürich- Switzerland

Tel: +41 43 343 03 55 - Fax: +41 43 343 03 56

**Direct Importers and Solo Distributors of**

Kings · Subash · ELAKKA · Niru · SURYAA · Maliban · Rubicon

Importas Cash & Carry, Baslerstrasse 102, 8048 Zurich, Switzerland. Tel. : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56



# தனிமனிதன் வெறும் மனிதனல்ல

ஏலையா க.முருகதாசன்

வரலாறுகள் யாரால் எழுதப்படுகின்றன?. வரலாறுகளுக்கு அடித்தளமாக இருப்பவர்கள் யார்? வரலாறுகள் இடைவெளியில்லாது தொடராக ஒரு சங்கிலிக் கோர்வை போல் தொடர்வது எவரால்? என்ற கேள்விகளை அடுக்கிக் கொண்டு போய் "யார்" என்ற தேடலை நோக்கி சிந்தனைப் பயணத்தைத் தொடர்ந்தால் எவ்வித மறுப்புமில்லாது தெளிவான பதிலாகக் கிடைப்பது, "ஒவ்வொரு தனிமனிதனுமே வரலாற்றை நகர்த்துகிறான் என்பதே.

மனிதர்கள் அனைவருமே அவரவர் இனத்தினுடைய, நாட்டினுடைய வரலாற்றை நகர்த்திய, நகர்த்திக் கொண்டிருக்கிற, நகர்த்தப் போகிறவர்கள் என அவர்கள் தனிமனித அலகாக வரலாற்றுக்குச் சொந்தக்காரர் ஆகிறார்கள்.

வரலாற்றை பொத்தம் பொதுவாகப் பார்ப்பவர்கள் வரலாறுகள் யாவும் இனக்குழுமங்களின் மன்னர்களாலும், தலைவர்களாலும்,நாட்டின் தலைவர்களாலும், விடுதலை அமைப்புகளின் தலைவர்களாலும் முன்னெடுக்கப்படுவதாக என நினைக்கிறார்கள்,அது தவறு.

மன்னர்களின் காலத்திலும் சரி இன்றைய காலத்திலும் சரி வரலாற்றின் சொந்தக்காரர்கள் ஒவ்வொரு தனிமனிதனுமே.

மன்னர் காலத்து வரலாறு மன்னர்களுக்குரியது என்பது தவறான கருத்து. மன்னன் என்ற பெயருடன் ஒரு மனிதன் தனித்து ஒரு நிலபரப்பை வைத்துக் கொண்டு தனது குடும்பத்தோடு மட்டுமே சகல வசதிகளுடன் வாழ்வானான் அவன் வாழ்வை ஊடறுத்துப் பார்க்கும் போது அவனுடைய வாழ்வு சாதாரண மனிதன் ஒருவனின் வாழ்வேயாகும்.

எனினும் இவன் எவ்வினத்தைச் சார்ந்தவனோ அவ்வினத்திற்கான அடுத்த பரம்பரையை உருவாக்குபவனாக கருதப்படும் நிலையில் அவனும் வரலாற்றை நகர்த்திச் சென்றதற்கான காரணியாகி உரித்துடையவனாக நிலை கொள்கிறான்.ஒரு குறிப்பிட்ட இனத்தின் வரலாறு, அந்த இனத்தின் தொடர்ச்சியான தொடராக அவ்வினம் வாழையடி வாழையாக சந்ததி உருவாக்கத்தின் மூலமே சாத்தியமாகிறது.

தனி ஒரு மன்னன் கோட்டை கொத்தளங்களுடன் படையணிகளுடன் தான் எந்த மக்களுக்குரியவனோ அந்த மக்களுக்கான மன்னனாக அவன் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற போது அவன் தன் "மக்களுக்கான" மன்னனாகவே கருதப்படுகிறான்.

மக்களில்லையேல் மன்னனின் தேவையே இருக்காது.மக்களை நிர்வகிப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் கோட்டை கொத்தளங்களும் படையணிகளும் தேவைப்படுவதாலும் மக்களைச் சார்ந்தே மன்னன் இருக்கிறான் என்பதால் அம்மன்னனின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அவ்வினத்திற்குரிய மக்கள்கூட்டத்தின் ஒவ்வொரு தனிமனிதனும் சமகால வரலாற்றுக்குரியவர்களாக அதற்கு உரிமையுடையவர்களாக கருதப்படுகிறார்கள்.

சமகாலம் என்பது நாள் பொழுதாகவும், ஒவ்வொரு நாள் பொழுதிலும் நிகழும் சம்பவங்களின் தொகுப்பு நாட்களின் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கொண்டு சமகாலமாக கணிக்கப்படுகின்றது.எனினும் நாள் பொழுதை சமகாலம் என அழைப்பதிலும் தவறில்லை. சமகாலத்தின் ஒரு அலகுதான் நாள் பொழுது.

மன்னர்களின் ஆட்சி பற்றி எழுதப்பட்ட வரலாறுகளோ செவி வழியாக மக்களுக்கு சொல்லப்பட்ட வரலாறுகளோ மன்னர்களை முதன்மைபடுத்தியே எழுதப்பட்டிருக்கின்றன, சொல்லப்பட்டிருக்கின்றன. அது ஆய்வு ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல.

மன்னன் என்ற வீரதீர பிம்பம் மக்களுக்கு மன்னன் மீதான பற்றையோ அல்லது பயத்தையோ ஏற்படுத்தியமையால் மன்னனைச் சார்ந்தோ தாம் வாழ்கிறோம் என்ற நினைப்பினால் தாமும் இந்த வரலாற்றுக்குரியவர்கள் என்ற உரிமையை அவர்களால் உணர முடியவில்லை.

மக்களின் சிந்தனைகள் காலம் காலமாக விரிவடைந்து செல்கிறது. ஆதி மனித தோற்றத்தில் இப்பொழுதிருப்பது போன்ற சிந்தனை மனிதர்களுக்கு இருக்கவில்லை. வாழ்வியலும் இப்பொழுதிருப்பது போல இல்லை. அதனால் மன்னர் காலத்து தனி மனிதன் ஒவ்வொருவரும் தாம் வெறும் மனிதர்கள் அல்ல என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மன்னர் காலத்து வரலாறு என்பது எழுதப்பட்ட வரலாறுகள் கொண்ட சம்பவங்களின் தனித்தன்மையினால் முக்கியத்துவம் பெற்றிருந்தாலும்கூட அப்பொழுது வாழ்ந்த மனிதர்களின் சந்ததிகளே இன்று வாழும் மனிதர்கள் என்ற மிகத் தெளிவான உண்மையின் திடத்தினால் வரலாற்றை இன்றுவரை நகர்த்தி வந்தவர்கள் மனித கூட்த்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதன் என்பதில் எவ்விதமான ஆய்வு நிலையிலும் மறுத்துரைக்க முடியாது.

மனித உயிரினம் இரு பாலினத்தைக் கொண்ட இனமாகும். ஆண் பெண் என்ற இரு பாலினத் தோற்றம் இனப் பெருக்கத்திற்காக இயற்கை அளித்த கொடை என்றே சொல்லலாம்.


மனிதர்கள் என்பவர்கள் பொதுவானவர்களாகவும் சிந்தனை வளர்ச்சியால் மனிதர்கள் இனங்களாக தம்மை வகைப்படுத்திக் கொண்டதாலும், தமக்குரிய நாட்டை தமக்குரிய மொழியை, தமக்குரிய பழக்க வழங்கங்களை, பண்பாடுகளை,குணவியல்புகளைக் கொண்டமையாலும், இவ்வினக்குழுமத் தன்மையூடாக அவர்கள் ஒரு குறிப்பிட்ட பெயர் கொண்ட நாட்டு மக்களாக இனங்காணப்பட்டனர்.

இந்த இனங்காணலுக்கு உரிமையுடையவர் அந்நாட்டுக்குரிய தலைவன் அல்ல, மக்களேதான்.மக்கள் என்பது ஒரு கூட்டம்.இக்கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும் தமக்குரிய வாழ்வை கொண்டிருப்பர்.
ஒவ்வொரு தனிமனிதனும் தான் எந்த இனத்தைச் சார்ந்தவனோ அந்த இனத்துக்குரிய மொழியைப் பேசுவதும் பழக்கவழக்கங்களைக் கொண்டிருப்பதாலும், குணவியல்புகளைக் கொண்டிருப்பதாலும் அவை தொடர்வதற்கும் அடுத்த சந்ததிக்கு அவற்றை கற்பிப்பதற்கும் அவன் தளமாகிறான். (தொடரும்)



# ImmoFinance
## Suisse GmbH





Contact :
**Selvaratnam Mathan**

- புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
- வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
- சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
- முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்



076 303 22 16
mathan@gmx.ch

பாகம் 3



# அவனா? இவன்!

அவன் பிறந்த பொழுது ஹிட்லர் 2வது உலகப் போரைத் தொடங்க வேண்டிய ஆயத்தங்களில் இறங்கி விட்டான். உண்மையில் அந்தப் போருக்கு கருவாக அமைந்தது 1 வது உலகப் போரின் முடிவும் அதன் விளைவாக மேற்கு நாடுகள் ஏற்படுத்திய போர் நிறுத்த உடன் பாட்டில் விதிக்கப் பட்ட நியாயமற்ற நிபந்தனைகளும்தான். முதலாவது போரில் படைவீரனாகப் போராடிய ஹிட்லரால் அந்த நிபந்தனைகள் தோல்வி உற்ற நாட்டின் மீது விதிக்கப் பட்ட தண்டனைகளாகத்தான் பார்த்தான் பார்க்கவும் முடிந்தது.

ஒருவேளை அந்தப் போரில் இன்றைய மகிந்த ராஜபக்ஷ போன்ற ஒரு தந்திரசாலி வெற்றி பெற்று இருப்பானேயாகில் நிபந்தனைகள் ஏதும் இல்லாத பெருந் தன்மையுடன். கூடிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நவநாகரிக களியாட்ட அரங்குகள் இராணுவத்தால் நடத்தப் படும் உல்லாச விடுதிகள் பயணங்கள் விபச்சார விடுதிகள் என அன்றே ஜேர்மனிய மக்களின் தேசிய எழுச்சியை கருவிலேயே உருவாக விடாது அடிமைத் தளையில் வைத்து இரண்டாவது போரை உருவாக்காமல் செய்திருப்பான்.

இன்று போல் அன்றும் அமெரிக்க பிரித்தானிய அரசுகளும் அவற்றின் தலைவர்களும் முட்டாள்களாகவே செயற்பட்டதால் ஹிட்லரும் ஜேர்மன் தேசிய எழுச்சியான நாசிசமும் 2வது உலகப் போர் எழவும் முடிந்தது.

உலகில் போர்களும் குடும்பங்களில் குழந்தைகள் பிறப்பதும் உலக நிகழ்வுகளே தீர்மானிக்கின்றன.

உலகம் மகிழ்ச்சியாகவும் அன்பு நிறைந்தும் காணப்பட்டால் அவை குடும்பங்களில் அத்தகைய சூழலை ஏற்படுத்தி இனிய காதல் நிலவச் செய்து ஆண் பெண் உறவில் அன்பும் மகிழ்ச்சியும் பொங்கப் பிறக்கும் பிள்ளைகளும் அன்பும் அமைதியும் உருவாக்கும் மனநிலையோடு பிறக்கும். அவர்களால் உலகில் அன்பும் அமைதியும் ஏற்படும்.

உலக வரலாற்றை பார்த்தால் போர் என்பது மிக அவசியமான ஒன்றாக மனித இனம் தனது மரபணுக்களில் ஏற்றுக் கொண்டு விட்டதோ என்ற ஐயம் எவருக்கும் எழத்தான் செய்கிறது. எகிப்தில் பாரோ மன்னர்களிடம் இருந்த இஸ்ரேலிய அடிமை மக்களை போராடி மீட்டு வந்த மோசே 40 ஆண்டுகளாக வனாந்தர வழியெங்கும் உள்ள மக்களுடன் போரிட்டு அவர்களின் உருவ வழிபாட்டை அழித்தான் என விவிலியம் பழைய ஏற்பாடு கூறுகிறது.

அப்படி அழிக்கப் பட்டவை சிவலிங்கங்களும் எனவும் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மெக்கா யாத்திரையில் பக்தர்கள் கல் எறிந்து வழிபடும் கல்லும் சிவலிங்கமே எனச் சில ஆய்வுகள் கூறுகின்றன. அப்படியானால் சேக்கிழாரின் பெரிய புராணத்தில் கூறப்படும் எறிபத்த நாயனாரின் வழி வந்தவர்களே இன்றைய ஹஜ் யாத்திரிகர்கள் என்றால் தவறாகுமா?

ஏசு சிலுவை யிடப்பட்ட பின்னர் ஜெருசல நகரை ஒட்டொமன் பேரரசுப் படைகள் கைப்பற்றி அழித்ததும் ஜெருசலம் பெரிய தேவாலயம் எரிக்கப்பட்டதும் அயலானை நேசி என அன்பைப் போதித்த யேசு பயங்கரவாதியாக பார்க்கப் பட்டதால்தானே!

அன்று ஏசு போராடியது ரோமானிய ஆக்கிரமிப்பு ஆட்சியை அதன் ஆதிக்க நிழலில் அதிகாரம் செலுத்தி மக்களை கடவுளின் பெயரால் துன்புறுத்திய போலி மதவாதிகளையும் வட்டிக்குப் பணம் கொடுத்து பணம்

திரட்டிய உயர்தட்டு வர்க்கத்தையுமே.

அந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் சிங்கள அரசுக்கு எதிரான தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டமும் சாதி தீண்டாமை அடக்கு முறைக்கு எதிராகவும் பிரபுத்துவ வாதிகளின் அதிகாரத்துக்க எதிரானதாகவுமே இருந்தது.

அதனால்தான் அதனை அழிப்பதில் சிங்கள ஏகாதிபத்தியமும் அதனைத் தமது நாட்டு நலன்கள் பெறுவதற்காக உதவிய உலக அரசுகளான இந்திய அமெரிக்க பிரித்தானிய சீன நாடுகள் தமக்கிடையே உள்ள பகைமைகளை மறந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைஅழித்தன.

இந்தப் போரைப் புனிதப் போராகக் கருதியதால் போலும் உலக நாடுகளின் அமைதி நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையும் தனது அடிப்படை இலட்சியங்களை மறந்து தமிழ் இன அழிப்பையே நடத்த உதவியதோடு அதற்கான நீதி விசாரணை கூட செயற்படுத்த முடியாது காணப்படுகிறது. இவை எல்லாம் இன்று போரும் மனித சுற்றுச் சூழல் அழிவுகளும் மிகத் தேவையான ஒன்றாக ஏற்றுவிட்டதை காட்டுகின்றன.

ஒரு வித்தியாசம் என்ன என்றால் ஏசுவுக்கு எதிரியாக விளங்கியது ரோமானிய அரசு மட்டும் எனக் கூறிவிட முடியாது. ஏனென்றால் றோமன் ஆளுநராக இருந்த பிலாத்து ஏசுவுஜீன் இரத்தப் பழிக்கு தான் உடன்பாடு இல்லை எனத் தெரிவித்து தனது கைகளைக் கழுவிக் கொண்டான் என்கிறது வரலாறு. ஏசு சிலுவையில் அறையப்பட அன்றைய மதவாதத் தலைவர்களும் வட்டி வியாபாரிகளும் காரணம் என்பதை அறிய முடிகிறது.

அது போல் விடுதலைப் புலிகளை அழிப்பதில் சிங்கள அரசு மட்டும் எனக் கூற முடியாது. வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபை உட்பட இந்திய அமெரிக்க பிரித்தானிய அரசுகளும் நோர்வேயும் தமிழீழம் விடுதலை பெறப் போராடப் புறப்பட்ட 30க்கும் குறையாத போராளிக் குழுக்களும் மேற்தட்டு பிரபுத்துவ தரகு அரசியல் முதலாளிகளும் பங்களிப்புச் செய்தனர் என்பதும் உண்மைகளாக வெளிவந்துள்ளன. அப்படியானால் போரும் அழிவுகளும் உலகத்துக்கு மிகத் தேவையான ஒன்றாக மாறிவிட்டதையே காட்டுகிறது என்பதுதானே அர்த்தமாகிறது?

இப்படியான உலகமாகத்தான் 1937ல் அவன் பிறந்த பொழுதும் உலகம் இருந்தது. அவன் உடம்பு புரட்டித் தவழ முற்பட்ட வேளையில் கிட்லரின் தேசியப் போராட்ட எழுச்சியும் எழுந்து நடை போட ஆரம்பித்தது. படிப்படியாக அது முன்னேறி அவன் மண்ணில் விளையாடத் தொடங்க அவனுக்கு வயது 6 ஆகிவிட்டது. அக்காலத்தில் வானொலித் தொலைக் காட்சிகள் கிடையாது. எங்கிருந்தோ எப்படியோ அங்கை பறையினம் இங்கை பறைஞ்சவை என தினமும் யாராவது போர் பற்றிய செய்திகளை பேசுவார்கள்.

பறைதல் பறையினம் பறைஞ்சவை என்ற தமிழ் சொற்கள் பேசுதல் அறிவித்தல் என்ற அர்த்தத்தில் அன்றைய தமிழ் வழக்கில் இருந்தன. அரசாங்க அறிவித்தல்கள் கூட பறை அடித்து மக்களுக்கு தெரியப் படுத்தும் முறை இருந்தது. தமிழ் அரசர்களின் ஆட்சிக் காலத்தில் மன்னர் ஊர் உலா வருவதை யானை மீது முரசம் வைத்து அடித்து அறிவிக்கும் அரச பதவிதான் இப்பொழுது உலக அளவில் ஆங்கில மொழியிலும் தீண்டத் தகாத சாதி எனப் பறையரை குறிப்பிடும் கொடுமை நடக்கிறது.

மன்னர் காலத்தில் அவர்களும் வேளாளர்களே. அரசுப் பணி இல்லாத பொழுது விவசாயம் செய்வார்கள். அப்பொழுதும் கூடப் போர் அறிவித்தலை பறை மூலம் மக்களுக்குத் தெரியப் படுத்தி படையாகத் திரண்டு போர்களத்துக்கு மக்கள் தாமாகவே செல்வர். பறை ஒலிகள் ஒவ்வொரு அறிவித்தலையும் வேறுபடுத்தும் வகையில் எழுப்பப் படும் அவற்றை மக்கள் தெரிந்து கொண்டு போருக்கா அல்லது வேறு அரச பணிக்கா எங்கே கூட வேண்டும் என அங்கே கூடுவர்.



1939 முதல் 1944 வரை 2ம் உலகப் போரின் தாக்கம் அவன் பிறந்த ஊரிலும் படிப்படியாக அதிகரித்து ஆங்கிலேயரின் இராணுவ முகாமும் இராணுவ வைத்திய சாலைக் கட்டிடத் தொகுதிகளும் யாழ்ப்பாணம் மைலிட்டி காங்கேசன் துறைக் கடலோரப் பகுதியில் கட்டப்பட்டு இராணுவக் கெடுபிடிகள் முதன் முதலில் அறிமுகமாயின. ட்ரக் அல்லது லொறிகள் படைகளை ஏற்றிச் செல்லப் பயன் படுத்தப் பட்டன. பெரும்பாலும் அந்த இராணுவ வண்டிகளில் ஆபிரிக்க கறுப்பர்கள் காணப்பட்டனர். அவர்களை மக்கள் காப்புலிகள் எனப் பேசிக் கொள்வர்.

உணவுக் கட்டுப்பாடும் பங்கீட்டு முறை எனப்படும் றேசன் கூப்பன்களும் முழுக் கோதுமை தானியங்களும்

அறிமுகமாயின. வரகு குரக்கன் சாமை போன்ற தானிய உணவுகளே அதிகம் பயிரிடப்பட்டதால் அவை அவனது அன்றாட உணவாகவும் இருந்தன. நெற் பயிற் செய்கைகளை பண்ணப் போதுமான வயல் நிலங்களும் நீர் வளமும் இல்லாத காரணத்தால் மிகக் குறைவான நெற் செய்கையே யாழ் குடாநாட்டில் செய்ய முடிந்தது. அக்காலத்தில் பெரும்பாலும் தென்னிந்தியா விலிருந்து வத்தைகள் மூலம் ஏனைய பொருட்களுடன் களவாகக் கடத்தப் படும் அரிசி மட்டுமே அதுவும் ஒரு கொத்து அன்றைய விலையில் 15 ரூபாய் விலையில் விற்கப் பட்டது.

போர் நெருக்கடி அதிகமாகி கொழும்பு திரிகோமலைப் பகுதிகள் யப்பானியரின் குண்டு வீச்சுகளுக்கு உள்ளான காலப் பகுதியில் இராணுவ முகாம் காரணமாக அவனது பகுதியும் போர்ச் சூழலுக்கு உள்ளானது. எங்கிருந்தோ அபாயச் சங்கொலி எழுப்பப் படும் அப்பொழுது எல்லாம் மக்கள் குண்டுத் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு தேட வேண்டும். பொது மக்கள் கூடும் இடங்களில் பொதுப் பதுங்கு குழிகளும் வாய்க்கால்கள் போன்ற ஆழமான தெருவோர கிடங்குகளும் அமைக்கப் பட்டிருந்தன

அவன் படித்த பாடசாலையில் அத்தகைய எச்சரிக்கை ஒலிகள் கேட்கும் போதெல்லாம் பள்ளிக்கூட மேசை வாங்குகளுக்குள் ஒளிந்து கொள்ள வேண்டும். அவ்வேளையில் வாயில் பேனா பென்சில் போன்ற எதையாவது கடித்தபடி இருக்க வேண்டும். இதற்கென பாடசாலை செல்லும் பொழுதெல்லாம் கழுத்தில் சிறு மரத் தடியை கட்டித் தொங்க விட்ட படியே செல்வோம்.

அந்தக் காலம் போய் விட்டதாக நினைத்திருந்த வேளையில் அதை விட பல ஆயிரம் மடங்கு கோரமான ஆபத்தான போர்ச் சூழல் ஒன்று வரும் என அவன் அல்ல வேறு எவரும் நினைத்திராத போது அதுவும் 1980 களில் வந்தது. ஆம் இதைத்தான் வரலாறு திரும்ப வரும் (History Repeats) என அறிஞர்கள் குறிப்பிட்டாரகளோ தெரியாது. (வருவான்...)


Dortmund மாநகரில்

# தமிழர் அரங்கம் கல்விக்கூடம்




**யேர்மன் மொழி வகுப்புக்கள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புக்கள்**

பாடசாலை மாணவர்களுக்கானது




**தமிழ் மொழி வகுப்புக்கள்**

தமிழ் மொழி வகுப்புக்களுக்கு கட்டணம் இல்லை



**பரத நாட்டிய வகுப்புக்கள்**

டோட்முண்ட் மற்றும் ஒபகவுசனில் நடைபெறுகின்றன



100 பேர் வரை அமரக் கூடிய மண்டப வசதி

உங்கள் இல்ல விழாக்கள், கலை விழாக்கள் அனைத்திற்கும் எமது மண்டபத்தை பயன்படுத்த முடியும்

**Rheinische Str 76 – 80 , 44137 Dortmund**

**Tel.: 0231 950 979 00 & 0151 633 633 33**

# Jaffna Stores

**Feilenstr. 8, 33602 Bielefeld | Tel.: 0521 174794 | Mob.: 0173 2807906**



ஆசியா, ஆபிரிக்கா, சீனா,
நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன், உடன்
மரக்கறிவகைகள், மீன் வகைகள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
Bielefeld நகரில்
ஒரு மாபெரும் நிறுவனம்.




*மொத்தமாகவும், சில்லறையாகவும்*
NSR *தயாரிப்புகளை விற்பனைசெய்ய விரும்புவோர்*
Jaffna Stores *உடன் தொடர்புகொள்ளுங்கள்.*

African *உணவுப் பொருட்களை மொத்தமாகவும்*
*சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*

**Öffnungszeiten:**
**Montag bis Samstag**
**von 08:30 bis 20:00**

**Geschäftsführer: Thayaharan Nadarajah**
**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**






# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை



வணக்கம் பாருங்கோ.. எப்பிடிச் சுகமா இருக்கிறியளே..? விடுமுறைக்கு வெளிக்கிட்ட பறவையெல்லாம் இப்ப கொஞ்சம் கொஞ்சமா வீடு திரும்புற காலம். கையில உள்ளதெல்லாம் கரைச்சிருக்கும். திரும்பவும் மூச்சை அடக்கிக்கொண்டு ஓடு ஓடெண்டு ஓடினாத்தான் விட்டதெல்லாம் திரும்பி உழைக்க முடியும். உப்பிடித்தான் தமிழரின்ர வாழ்க்கை ஓடுது. இல்லை எண்டால் வெள்ளைக்காரன் மாதிரிதான் வாழவேணும். சொந்தத்துக்கும் குடுக்கத் தேவையில்லை, ஊருக்கும் அனுப்பத் தேவை இல்லை. ஆனால் நாங்கள் அப்பிடியே..?

இஞ்ச இருந்து ஊருக்குப் போற ஆட்களும் சரி, அங்க இருந்து இங்க வாற ஆட்களும் சரி, அக்கரைக்கு இக்கரை பச்சை எண்ட கணக்குத்தான். அதிலையும் இங்க இருந்து அங்க போகும்போது இருக்கிற சந்தோசம் அங்க இருந்து திரும்பி வரும்போது பலருக்கு இருக்கிறதில்லை. ஏன் எண்டால், சொந்த ஊரின்ர சுகம் போல வராதுதானே. ஆனாலும், அங்கேயே இருந்திட்டால் யார் பிழைப்புக்கு வழி செய்யுறது..? அதை மனசில நினைச்சுக்கொண்டே பலர் திரும்பி ஓடிவருகினம். ஆனால், இவை எல்லாரையும் விட இன்னும் கொஞ்சப்பேர் இருக்கினம். அவையின்ர பிழைப்பு என்ன தெரியுமே..? இஞ்ச இருக்கும்போது, இலங்கையில தன்ர கையிலதான் அரசாங்கமே இருக்கெண்டு சொல்லுவினம். இலங்கையில நிண்டால், ஐரோப்பாவில தன்னை விட்டால் ஆளில்லை எண்டு அங்க உள்ள ஆட்களுக்கு அடிச்சு விடுவினம். இதால இவைக்கு என்ன பிரயோசனம் எண்டு நினைக்கிறியளே..? எடக் கோதாரி, உப்பிடியானவங்களின்ர உழைப்பே உப்பிடிப் பொய்யில தானே நடக்குது. அப்பிடி அடிக்கடி ஒருத்தர் அள்ளிவிட்டுக்கொண்டு திரிஞ்சவர், பண்ணின அட்டகாசக் கதை ஒண்டு சொல்லலட்டே..

என்னெண்டாப் பாருங்கோ, அகதி வாழ்க்கை வாழ வந்த தமிழனைப் பிடிச்சு, அவன்ர இரத்தத்தை உறிஞ்சி அதில சுகபோக வாழ்க்கை வாழுற தமிழர்கள் பலர் நிறையப்பேர் இருக்கினம். பார்வைக்கு அவை வெள்ளைக்காரன் மாதிரி, ஏதோ மாபெரும் நிறுவனத்தைக் கட்டியாளுற உத்தியோகத்தர் கணக்கில இருப்பினம். ஆனால் பயங்கர சுத்துமாத்துக் கூட்டம் பாருங்கோ. அங்க வாங்கி இங்கால குடுக்கிறதும், இங்கால வாங்கி எங்காலயோ குடுக்கிறதும் தான் அவையின்ர மாபெரும் தொழிலுகளில ஒண்டு கண்டியளோ. அப்பிடியான பேர்வழி ஒருத்தர், ஐரோப்பாவில தான் ஒரு மாபெரும் மொழிபெயர்ப்பாளர் எண்ட வகையில தமிழ் சமூகத்துக்குள்ள அறிமுகமாகி இருக்கிறார். அதைவிட அப்பிடிச் சொன்னாத்தான் அவரைப் பலபேருக்குத் தெரியும். அவர் அதே நாட்டில, அகதித் தஞ்சம் தேடி வந்த பலருக்கு மொழிபெயர்க்கும் போது, அவை சொல்லுறதை மாத்தி மாத்திச் சொல்லி, கனபேருக்கு அள்ளிவைச்ச கதையும் சொல்லுறவை. ஆனாலும், சனம் ஆளைத்தவிர வேற யாரையும் தேடிப்போறதும் இல்லை. ஏன் எண்டால், ஐரோப்பிய நாடுகளின்ர குடிவரவுத் திணைக்களங்கள் எல்லாம் அவருக்குக் கைவைந்த

கலை எண்டுறமாதிரிதான் ஆள் உலகம் முழுக்கக் கதைகட்டிவைச்சிருக்கு.

இப்ப கொஞ்சக்காலமாய் ஆள் இலங்கைக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில ஒரே போக்கும் வரத்துமா இருந்திருக்கு. என்ன விசயம் எண்டு பாத்தால் ஆள் இலங்கையிலையும் ஒரு அலுவலகம் திறந்து வைச்சிருக்கு. அது என்ன அலுவலகம் தெரியுமே..? சர்வதேச போதைப்பொருள் தடுப்பு அலுவலகமாம். கடவுளே, கேட்ட உடனே மூச்சு விடாமச் சிரிச்சதில எனக்கு வாயால நுரை தள்ளிட்டுது பாருங்கோ. ஏன் எண்டால் இலங்கையில சர்வதேச போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஒரு சிங்களவன் கூட கிடைக்கேல்லை எண்டு நினைக்க பெரிய கறுமமாக் கிடக்கு. சரி, அதுதான் பரவாயில்லை, ஆள் இலங்கையில் தேசப்பற்றாளர் ஒரு குறியீட்டுப் பெயரோட முகவரி அட்டையும் அடிச்சு வைச்சுக்கொண்டு திரியுது. அதுவும் சிங்களப் பெயரிலே அடிச்சு வைச்சுக்கொண்டு திரியுது எண்டாப் பாருங்கோவன். அதுவும் தமிழ்ப் பெயரை வேற மாதிரி எழுதி அச்சடிச்சுக் கிடக்கு. தமிழனே தன்ர பெயரைக் கிட்டத்தட்ட சிங்களம் தமிழ் கலந்த பெயர்மாதிரி அடிச்சு வைச்சுக்கொண்டு திரிஞ்சால், சிங்களவன் திருகோணமலையை “திரிகினாமலே” எண்டு சொல்லுறதில என்ன தப்பு இருக்கு சொல்லுங்கோ பாப்பம். உப்பிடியான ஆட்களுக்கு பச்சைமட்டையை தண்ணீல ஊறப்போட்டு, தலைகீழாத் தொங்க விட்டு வெழுத்தால் தான் பாருங்கோ எனக்கு கொஞ்சம் நிம்மதியா இருக்கும்.

சரி அதுதான் பரவாயில்லை எண்டு பாத்தால், ஆள் கிட்டடியில கனடா பக்கம் போயிருக்கு. அங்க ஒரு பெடியனுக்கு கலியாணம் பேசுறன் எண்டு சொல்லிப்போட்டு, பெடியனின்ர படத்தையும் வாங்கிக்கொண்டு இலங்கைக்குப் போயிருக்கு. இலங்கைக்குப் போன இடத்தில, யாரோ பிள்ளைக்கு இந்தப் பெடியனின்ர படத்தைக்காட்டி கலியாணம் பேசுறன் எண்டு வெளிக்கிட்டு, இரண்டு குடும்பத்துக்கும் இடையில நிண்டு தரகுவேலை பாத்து, ஆள் கொஞ்சம் உழைச்சுப்போட்டுது. உழைச்சது தான் பத்தாமல், ஒரு பெருந்தொகைக் காசை கைமாற்றாக மாப்பிளை குடும்பத்திட்ட , இரண்டு கிழமையில் திருப்பித் தாறன் எண்ட நிபந்தனையோட வாங்கி அந்தக் காசோட ஆள் வேற எங்கயோ மாறீட்டுது. காசு கடன்கேக்கும்போது சொன்ன காரணம் என்ன தெரியுமே..? யாழ்ப்பாணத்திலே உள்ள கோயில் ஒண்டுக்குத் தேர் செய்யப்போறதாகவும், அதுக்கு அவசரமா ஒரு தொகை தேவை எண்டும்தான் ஆள் கேட்டிருக்குது பாருங்கோ. மாப்பிள்ளை வீட்டுக்காரரும், கோயிலுக்குத்தானே எண்ட பெயரிலே குடுத்திட்டுதுகள். இரண்டுமாதம் கழிய ஆளுக்குத் தொலைபேசி அழைப்பெடுத்தால் அது வேலை செய்யேல்லை. இலங்கையில உள்ள அலுவலகம் எண்டு சுத்துமாத்துமன்னன் குடுத்த தொலைபேசி இலக்கத்துக்கு எடுத்தால் அது சத்தமே இல்லை. அப்பத்தான் மாப்பிள்ளை வீட்டாருக்கு கொஞ்சம் பொறிதட்டியிருக்குது.

உடன கொழும்பில உள்ள தங்கட சொந்தக்காரர் மூலமாக அந்த அலுவலகத்தைத் தேடிப் போகச் சொல்லி கனடாவில் இருந்து மாப்பிள்ளை வீட்டுக்காரர் சொல்ல, சொந்தக்காரரும் தேடிப்போயிருக்கினம். அங்க போனால், தேடிப்போன ஆளுக்கு ஒரே தலை சுத்தலாப் போச்சு. ஏன் தெரியுமே..? அந்த முகவரியில் ஒரு அலுவலகத்துக்கான அடையாளம் ஒண்டுமே இருக்கேல்லை. கதவைத்தட்டினால் ஒரு பெண் தான் கதவைத்திறந்திருக்கிறா. போனவர் சுத்துமாத்துச்சிங்கத்தின்ர பெயரைச்சொல்லி கேக்க, அந்தப் பெண் சிங்களத்தில பதில் சொன்னாவாம். அவர் வெளீல போயிருக்கிறார், உள்ள வந்து இருங்கோ எண்டு சொல்ல இந்தாளும் உள்ளுக்க போயிருக்கு கண்டியளோ. அங்க போய்ப் பார்த்தால், நாலைஞ்சு பெண்கள் அரைகுறை ஆடை உடுத்திக்கொண்டு திரியினமாம். போன ஆளுக்கு இது ஏதோ பிழையான இடம் எண்டு விளங்கீட்டுது. நான் வெளியில போய் காவல் நிக்குறேன் எண்டு சொல்லிப்போட்டு ஆள் வாசலுக்கருகில நிக்க சுத்துமாத்துச்சிங்கம் வந்திருக்கு. நம்மட ஆள் போய் தன்னை அறிமுகப்படுத்தின உடன, இந்தா நான் காசோலை தாறன் வாங்கோ எண்டு சொல்லிக்கூட்டிக்கொண்டு போய், கனடாக்காரர் கொடுத்த தொகை அளவுக்கு காசோலை ஒண்டை எழுதிக்குடுக்க போனவரும் வாங்கிக்கொண்டு வந்திட்டார். வந்தவர் நேர வங்கியில போய் காசோலையை வைப்புச் செய்யக் குடுத்திருக்கிறார். குடுத்த வேகத்தில திரும்பி வந்திருக்கு காசோலை. கேட்டால், செப்புச் சல்லியும் இல்லை அந்தக் கணக்கில எண்டுட்டான் வங்கிக்காரன். அடுத்த நிமிசமே நம்மட ஆள் திரும்பவும் அந்த அலுவலகத்துக்கு ஓடியிருக்கு. அங்க போய்க் கேட்டால், சுத்துமாத்துச் சிங்கம் இப்பதான் யாழ்ப்பாணம் போகுது எண்டு சொல்லியிருக்கு இன்னொரு பொம்பிளை. சொன்னால் நம்ப மாட்டியள் பாருங்கோ, இன்றுவரைக்கும் காசுமில்லை, ஆளுமில்லை.

கனடாக் கார மாப்பிளை வீட்டாரும் விடேல்லை. சுத்துமாத்துச் சிங்கம் குடுத்த முகவரி அட்டையில இருந்த

ஐரோப்பா முகவரிக்கு அங்க உள்ள ஒரு ஆளை அனுப்பியிருக்கினம். அங்க போய்ப் பாத்தால், அது வேற ஒரு சட்டத்தரணியின்ர முகவரியாம். அட நாதாரி, அப்பிடியெண்டால் உவனுக்குச் சொந்த முகவரியே இல்லையே எண்டு அப்பத்தான் கனடாக்காரருக்கு ஓடி வெளிச்சிருக்கு. இப்பவரைக்கும் ஐரோப்பாவிலையும், இலங்கையிலையும் மாறி மாறி, உந்தப் போதைப்பொருள் தடுப்பு அதிகாரியைத் தேடுகினம். ஆனால், சிங்கமோ சிக்குதேயில்லையாம். அதுக்குள்ளே, ஐரோப்பாவில சிலருக்கு இரட்டைக் குடியுரிமை இலங்கையில வாங்கித்தாறதாச் சொல்லி சிங்கம் காசு வாங்கியிருக்கு. அதைவிடப் பெரிய கொடுமை என்னவெண்டால், இலங்கையில உள்ள அந்தப் பெண்கள் குடியிருப்பு அலுவலகத்தில, உந்தச் சிங்கம் மகிந்தாவோடயும், மைத்திரியோடயும் ஒண்டா நிண்டு எடுத்த புகைப்படம் எல்லாம் சுவர்ல தொங்குதாம். ஆனால் அதெல்லாம் உண்மையான புகைப்படமோ, அல்லாட்டில் கணணிப் பிரளயமோ எண்டு சந்தேகமாவும் கிடக்கு எண்டுறார் தேடிப்போன நண்பர். எந்தக் கோயிலுக்குத் தேர் செய்யவேண்டு காசுவாங்கினானோ, அங்க ஏற்கனவே ஒரு தேர் நிக்குதாம். அதுவும் பச்சைப்பொய். காவல்துறையிட்ட அறிவிக்கலாம் எண்டால், ஆள் உள்ளுக்க போனால், குடுத்த காசைத் திருப்பி எடுக்க முடியாது எண்ட பயத்தில இன்னும் ஆளைத் தேடும் படலம் தொடருது பாருங்கோ.

வாயில வடை சுடுறவனை நம்பி, காசைக் கையில குடுத்தால் ஊர் ஊரா அலைய வேணும் பாருங்கோ. அதுவும் கள்ள முகவரி அட்டையைப் பாத்து மயங்கினால் கையில உள்ளதெல்லாம் நாசம் கண்டியளோ..

அந்த இருட்டுக்கும் பார்க்கின்ற விழி இருக்கும்
எந்த சுவருக்கும் கேட்கின்ற காதிருக்கும்
சொல்லாமல் கொள்ளாமல் காத்திருக்கும்
தக்க சமயத்தில் நடந்தது எடுத்துரைக்கும்

அப்ப வரட்டே...



# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



## PC Systeme komplett ab CHF 329.-!!

**Keine versteckten Kosten, alles inkl. MwSt.!**



**HP dc7700 Tower**
- Intel Core 2 Duo E6300 - 2x 1.86GHz
- 80GB Festplatte
- 2GB DDR2 RAM
- DVD/CD-Brenner
- 8x USB 2.0
- 1 Jahr Garantie

**CHF 60.-** inkl. MwSt.

**Lenovo T410 Notebook**
- Intel Core i5 m540 - 2x 2.53GHz
- 250GB Festplatte
- 4GB DDR3 RAM
- DVD-Brenner
- 3x USB 2.0, USB 3.0
- 1 Jahr Garantie



**CHF 249.-** inkl. MwSt.




**!! REPARATUREN ALLER MARKEN !!**

- sehr schnelle Lieferung!
- Hauslieferungen
- Vor-Ort Installationen
- Netzwerklösungen für Firmen
- Reparaturen aller Marken!

**iPhone Reparaturen:**
**www.iphonefan.ch**



**Mac Pro 1.1**
- 2x 5150 (4x 2.66GHz)
- 250GB Festplatte
- 8GB DDR2 RAM
- Nvidia Geforce 7300GT Grafikkarte, mit 256MB RAM
- 1 Jahr Garantie

**CHF 290.-** inkl. MwSt.


## günstige gebrauchte Computer Reparaturen aller Marken

# www.pckaufen.ch

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50
Rosengartenstrasse 4- 8037 Zürich - Tel: 044 271 00 07

für Neuware besuchen Sie

**pagevision.ch**




# கிராமங்களில் இருந்து ஐரோப்பாவரை
# இசை – நாடக – கூத்துக் கலை

**வண்ணை தெய்வம்**

வாசகர்களுக்கு வணக்கம்!
கூத்துக் கலைஞர்கள் வரிசையைத் தொடர்கின்றோம். இந்த இதழிலும் இரண்டு கூத்துக் கலைஞர்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றேன். இவை தவிர பாரிசில் உள்ள ஒரு மூத்த கூத்துக் கலைஞர் என்னுடன் தொடர்பு கொண்டு ஆர்வமுடன் கலந்துரையாடி ஐரோப்பியாவில் வாழ்கின்ற பல கூத்துக் கலைஞர்கள் பற்றிய தகவல்களைத் தந்துள்ளார். யாழ்ப்பாணத்துக் கலைஞர்களின் தகவல்கள் நிறைவுற்றதும் அவை தொடரும்.

நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி. பூந்தான் யோசேப்பு



நாட்டுக்கூத்துக் கலைஞர்களில் பூந்தான் யோசேப்பு அவர்களுக்கு நிகரான அவரிலும் மேன்மையாகப் பாடி ஆடி நடிக்கக்கூடிய கலைஞர்கள் அத்துறையில் இருந்தபோதும் பூந்தான் யோசேப்பு அவர்களுக்க ரசிகர்கள் கூட்டம் அதிகம்; அதிலும் மேலாக குறுகிய காலத்தில் அவர் அடைந்த புகழ்! இவை காரணமாக நாட்டுக்கூத்தைப்பற்றிக் கதைக்கின்றபோது பூந்தான் யோசேப்பு அவர்களின் பெயர்தான் முதலில் உச்சரிக்கப்படுகின்றது.

நமது பாரம்பரிய செல்வமான நாட்டுக்கூத்துக் கலையை இலங்கையில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் இருந்து திருக்கோணமலை முதல் மன்னார்வரை கொண்டு சென்று அதனுடைய மகிமையை எழுபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் அறிமுகப்படுத்தி அங்குள்ள கலையார்வமுள்ளவர்க்கு கூத்தைப் பழக்கி அந்தக் கலையை அழிந்துவிடாமல் பார்த்த பெருமையில் கலாநிதி பூந்தான் யோசேப்பு அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு.

இவர் தமது கலைக்குழுவினருடன் இணைந்து 2000த்திற்கும் அதிகமான மேடைகளில் தமது பல கூத்துக்களை நாடு எங்கும் அரங்கேற்றி நாட்டுக்கூத்து என்றால் அது பூந்தான் யோசேப்புத்தான் என்று சொல்லுமளவிற்கு பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் அபிமானத்தையும், பாராட்டுக்களையும் பெற்றிருக்கின்றார்.

ஒலிபெருக்கி மக்களின் பழக்கத்திற்கு அதிகம் வராத அந்தக் காலத்தில் முழு இரவும் மூன்று பாத்திரங்களையும் ஏற்றுப் பாடுவது என்பது சாதாரண விசயமல்ல! அதுவும் ஒரு பாடலையே மூன்றாகப் பிரித்துப் பாடும் அந்தக் காலத்தில் இவரோ மூன்று பாத்திரங்களையும் ஏற்று நடிப்பதில் வல்லவராக விளங்கினார்!.

கிராமப்புறங்களில் மட்டும் மேடையேறிக் கொண்டிருந்த நாட்டுக்கூத்துக்கள் பூந்தான் யோசேப்பு போன்ற கலைஞர்களின் அயராத உழைப்பினாலும், ஆற்றலினாலும் நாட்டுப்புறங்களிலும் புது மெருகுடன் மேடையேற ஆரம்பித்தன! காத்தான் கூத்து, நாட்டுக்கூத்து போன்ற கூத்துக்களின் இசை வடிவங்களில் நவீன நாடகங்களை அரங்கேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்ற கலைஞர்களாக அண்ணாவியார் இளைய பத்மநாதன், கலைஞர் பாலேந்திரா, கலைஞர் தாசீயஸ் போன்றவர்களைக் குறிப்பிடலாம். பேராசிரியர் கைலாசபதி போன்றவர்களினால் பல்கலைக் கழகம்வரை சென்றதும் பெருமைக்குரிய விடயமாகும்.

சங்கிலியன், ஞானசவுந்தரி போன்ற கூத்துக்களில் பூந்தான் யோசேப்பு அவர்கள் உணர்ச்சிகரமாக பாடி ஆடி நடிப்பதைப் பார்த்த சக கலைஞனும் இசை நாடகத்துறையில் வித்தகருமான 'கலாநிதி" நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் பூந்தான் அவர்களின் திறமையை வியந்து பாராட்டியிருக்கின்றார்.

பழம்பெரும் புலவர்களால் எழுதப்பட்ட நாட்டுக்கூத்துச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவன கிராமப் புறங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்க அப்புதையல்களை தேடி எடுத்துவந்து பாதுகாத்து வந்தவர் யோசேப்பு அவர்கள். அவைகளை நூல் வடிவில் கொண்டுவர முயற்சி எடுத்த போதிலும் பதிப்பாசிரியர் மு.வ. ஆசீர்வாதம் அவர்களின் மறைவினால் அம்முயற்சி தடைபட்டு நின்றுவிட்டது. (இப்பொழுது அவைகளின் நிலை எப்படியெனத் தெரியாது)

நாட்டுக்கூத்தில் நடிகர்களே பாடி நடிக்கும் முறை இந்த காலத்தில் ஒரு இரவு முழுவதும் பாடி நடிப்பதனால் நடிகர்கள் படும் கஸ்றங்களைத் தவிர்ப்பதற்காக பூந்தான் யோசேப்பு அவர்கள் தனது காலத்தில் புதிய மரபுகளைப் புகுத்தினார்! அதாவது ஒவ்வொரு பாத்திரத்திற்கும் இருவர் அல்லது மூவர் என வகுத்து கூத்தில் நடிக்கும் முறையை அறிமுகப்படுத்தி அம்முறை நடிகர்களுக்கு நடிப்பதற்கு இலகுவாக இருந்ததனால் படிப்படியாக ஏனைய அண்ணாவிமார்களும் இம்முறையையே பின்பற்றினார்கள். இது பூந்தான் அவர்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

இதனால்த்தான் கொழும்பில் அரங்கேறிய சங்கிலியன் கூத்தில் முதலில் பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராசன் அவர்களின் மகன் திலீபனும், நடுப்பகுதியில் சில்லையூர் செல்வராசன் அவர்களும், இறுதிப் பகுதியில் பூந்தான் யோசேப்பு அவர்களும் தோன்றி களைப்பின்றி அதிக சிறப்பாக பாடி ஆடி நடித்தார்கள்.

1936ம் ஆண்டு இளவாலைக் கிராமத்து மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அக்கிராமத்தில் உள்ள பழந் தலைமுறைக் கலைஞர்களையெல்லாம் இணைத்து 'வேத சகாயம்பிள்ளை" நாட்டுக்கூத்தை நெறிப்படுத்தி மேடையேற்றிய யோசேப்பு அவர்கள் அக்கூத்தின் மூலம் 'அண்ணாவியார்" என்னும் ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டார்.


இத்தனை சிறப்புக்களுக்குரிய இப் பெரும் கலைஞனுக்கு நாட்டுக்கூத்துக் கலைஞன், நாடக சிரோன்மணி, நாடகக் கலாநிதி, நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி, நாட்டுக்கூத்துப் பேரொளி, கலைவேந்தன், கலைஞானபூபதி, இசைப்புலவர், நாடக மாமன்னன், நாட்டுக்கூத்துக் கலைக் காவலன், நாட்டுக்கூத்துப் போராசிரியர் திலகம், கலைக்குருசில், நாட்டுக்கூத்து மாமேதை, நாட்டுக்கூத்துத் தந்தை, ஆகிய பட்டங்களெல்லாம் கிடைத்திருக்கின்றன.

இவருடைய கலைத்துறை வாழ்க்கை வரலாற்றை பிரபல எழுத்தாளர் அகஸ்த்தியர் அவர்கள் 'பூந்தான் யோசேப்பு கலையுலக வாழ்க்கை வரலாறு" என்ற நூலாக எழுதியிருக்கின்றார். அந் நூலுக்கு இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருது கிடைத்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

கலைஞர் ரகுநாதன் ஆவர்கள் தயாரித்த 'நிர்மலா" திரைப்படத்தில் ஒரு சிறப்புக் காட்சியாக பூந்தான் அவர்களின் கூத்து ஒன்றும் இணைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இன்று நாட்டுக்கூத்து என்றால் பூந்தான் யோசேப்பு தான் எனப் பேசப்படுவது அந்தக் கூத்துக் கலைக்கு கிடைக்கப்பெற்ற பெருமையா? அல்லது இந்தக் கலைஞனுக்கு கிடைத்த பெருமையா? என்று ஒரு பட்டிமன்றம் வைத்துத்தான் விவாதிக்க வேண்டும்!.

நாட்டுக்கூத்துக் கலைஞர் திரு. ஆசீர்வாதம் மரியதாஸ்.



குருநகரைச் சேர்ந்த ஆசீர்வாதம் தம்பதிகளின் புதல்வராக குருநகரிலேயே பிறந்த இவர் சிறு வயது முதலே பாரம்பரியமான நாட்டுக்கூத்துக்களில் நடிக்க ஆரம்பித்தவர். அந்த நாட்களில் குருநகரில் கூத்துக் கலையில் பிரபலம் பெற்று விளங்கிய நடையர் சின்னத்துரை அவர்களின் 'ஆட்டு வணிகன்" என்ற நாட்டுக்கூத்தைப் பார்த்து தானும் நாட்டுக்கூத்தில் நடிக்க வேண்டும் என ஆவல் கொண்டு தனது 9வது வயதில் அந்த ஆசையை நிறைவேற்றிக்கொண்டார்.

1950வது ஆண்டளவில் நாட்டகூத்துக்கள் பலவற்றை மேடையேற்றுவதற்குக் காரணமாக இருந்த குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் மேடையேறிய 'பாலசூரன்" என்னும் நாடகத்தில் கட்டியக்காரன் வேடத்தில் முதன் முதலாக தோன்றி நடித்தார். அதைத் தொடர்ந்து இவர் வசாவிளான், வடமாராட்சி கிழக்கு, குடாரப்பு,பருத்தித்துறை, கொழும்புத்துறை, நீர்வேலி, சக்கோட்டை, அச்சுவேலி, ஊர்காவற்துறை, கிளிநொச்சி, விளான் போன்ற பகுதிகளில் முக்கிய பாத்திரங்களை ஏற்று 50க்கும் மேற்பட்டநாட்டுக்கூத்துக்களில் தோன்றி 300க்கும் மேற்பட்ட அரங்குகளில் நடித்திருக்கின்றார்.

இவர் தனது குருவாக குருநகரைச் சேர்ந்த அண்ணாவியார்களான வைரமுத்து. அந்தோனிப்பிள்ளை (ஊசோன்), யோசப் (மச்சுவாய்) சின்னத்துரை, மற்றும் சின்னக்கிளி ஆகியோரை நன்றியுடன் நினைவு கூருகின்றார். பல நாட்டுக்கூத்துக்களை தனது சொந்தச் செலவிலேயே மேடையேற்றிய இவர் அந்நாளில் பிரபலமான கலைஞர்களாக விளங்கிய அண்ணாவியார் சாமிநாதன், சுவாமிப்பிள்ளை, ராசாத்தம்பி, பெண் அண்ணாவியார் திருமதி திரேசம்மா, சில்லையூர் செல்வராசன், பூந்தான் யோசப்பு, நீர்வேலி அந்தோனிப்பிள்ளை, பெலிக்கியான், அருமைத்துரை, ஸ்ரல்ஸ்லாஸ், வ.அல்பிரட், பேக்மன் ஸீஜயராசா ஆகிய கலைஞர்களுடன் எல்லாம் இணைந்து நடித்துள்ளார்.

இவர் பாடிய கூத்துக்கள் பல புகழ் பெற்ற அண்ணாவிமார்களாலேயே பாரட்டப்பட்டுள்ளன! இந்தப் பாராட்டுக்கள் கொடுத்த உத்வேகம் பல கூத்துக்களை தானே நெறிப்படுத்தி மேடையேற்றி அவை வெற்றிபெற இவரை அண்ணாவியார் ஸ்தானத்திற்கு உயர்த்தியது. இவரின் நெறியாழ்கையில் உருவான சீரடி பிரபு, விஜயமனோகரன், மருதநாட்டு இளவரசி, ஆட்டு வணிகன், வேதத்தின் வெண்புறா, ஸீஜனோவா, நொண்டி நாடகம் போன்றவை ரசிகர்களால் பெரிதும் வரவேற்பு பெற்ற கூத்துக்களாகும். எஸ்த்தாக்கிய என்னும் நாட்டுக்கூத்தையும் நாட்டுக்கூத்துப் பாடல்களைக்களைக்கொண்ட தனி நிகழ்ச்சிகளையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்காக ஒலி வடிவல் தயாரித்துக் கொடுத்துள்ளார்.

இவருடைய பயிற்றுவித்தலில் உருவாகிய பல இளம் கலைஞர்கள் இன்று நாட்டுக்கூத்துத் கலையில் பிராகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவருடைய கலைச் சேவையைக் கௌரவிக்கும் முகமாக யாழ் சென் றோக்ஸ் சனசமூக நிலையம், யாழ் திருமறைக் கலாமன்றம், யாழ் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் அகியவை இவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்திருக்கின்றன.

இவருடைய கலைப்பணி நாட்டுக்கூத்துக் கலைத்துறை என்றும் இவர் பெயரை மறாவதிருக்கும்.

லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக்கடை

ASI Boucherie
PARIS-FRANCE



வாடிக்ளகயளர்கள் அதிகம் ஆனதால் தினமும் புதிய இறைச்சிகள்
தமிழ் வாசம் வீசும் ஐரோப்பிய இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக்கடையின் இறைச்சிக்கறி வாசமும்
ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்.
சுவையான இறைச்சி உண்பதற்காக, ஆசி இறைச்சிக்கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்!
அன்பான வரவேற்ப! தினமும் பதிய இறைச்சி வகைகளே விற்கப்படுகின்றது.
இது எப்படி சாத்தியமாகின்றது? தரமான இறைச்சியே விற்கப்படுவதால் வாடிக்கையாளர்களோ அதிகம்.

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்

ஆடு முழுதாகவோ அல்லது அரையாகவோ
கிலோ 4,20€

தினமும் ஆட்டுப்பங்கு

195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord




**www.kerven-gmbh.com**

**KERVEN GMBH**
Rheinische Str. 64 | 44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com

**KERVEN GMBH**
191 Rue du Faubourg 75010 Paris
Tel : 09 77 19 59 11 | Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com

# உளம் திறக்கும் உண்மைகள்...

"உளம் திறக்கும் உண்மைகள்..." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.
AKARAM - PO BOX 4153, 59037 Hamm - Germany - eMail: editor@akram.eu

## கடலா கடனா ?

சூழல் மாசு அதிகரிப்பால்
இலங்கை கடலில் மூழ்கும்
என்கிறார்கள் நிபுணர்கள்
கடனில் மூழ்கடித்துவிட
சர்வ தேச நிதியகம்
மேலும் பல மில்லியன்கள்
கடன் கொடுக்கிறது

கருமி



## மன்னாரில் பெண்கள்

எங்கள் பெண்கள் பற்றி
கவலைப் பட இஸ்ரவேலின்
அன்னாசிப் பெருந்தோட்டம் !
அடுத்து கேரளத்துக் கஞ்சாத்
ஆப்கானத்து அபினும்
வருமோ?

ஞானி



## நட்பு

கைகோர்த்து விளையாடிய சிறு பருவம்
குழியில் தள்ளி சிரித்தது இளமை



## நீதியும் நியாயமும்!

ராஜிவ் கொலையின்
குண்டு யாருடையது
கண்டறிய வேண்டுமாம்!
அதைக் கண்டு பிடிக்காமலே
ஈழத் தமிழினத்தை
படுகொலை
செய்தது நியாயமா?

பாக்கியம்



## போலி

முகமூடி பேசும் அழகிய வார்த்தை
வாழ்க்கை மேடையில் ஓர் நாடகம்



## வாழ்க்கை

தோல்வியை நொந்து சிந்திக்காதே
முந்திக்கொள் வெற்றி உன்னருகில்

# தீயை எரித்த திரி

நீரருந்தும் வேளைகளில்
நிகழும் ''மிடறு'' இடைவெளிகளுக்குள்ளான
தாகத்தின் கொடுமையில் - உன்
தவிப்பதனை உணர்ந்துகொண்டேன்.

தீயென்றாலே சுட்டுவிடும் என்ற அடைமொழியெல்லாம்
தீய்ந்துபோய்க்கிடக்கிடந்தது
தியாக தீபமாக நீ மாறியபிறகு.

பசியும் தாகமும் வெல்லப்படமுடியாதென்பதே
பாமர மக்களின் எண்ணம்.
அதையுடைத்து
வெளிச்சமிட்டுக் காட்டியவன் நீ.

பசிக்கும் தாகமும் சேர்ந்து வரினும்
பற்றுகொண்டவரை வெல்லமுடியாதென்பதற்குப்
பாடமானவன் நீ.

யாகாவாராயினும் நாகாக்க என்பார்கள்.
சாகாவாராயினும் நாடு காக்க என்றாய் நீ.

திரியாக மாறி
எரிந்துபோதும் இறுதித்தருவாயில்
தீயை எரித்து திரியானவன்.



கல்லார் எனப்படுவோர் யாரெனில்
கல்லாதவரல்ல - தம்மைக்
கல்லாய் மிதிப்பவரைக் கண்டபின்னும்
கல்லாய்க் கிடப்பவரே
கல்லாதவர் என்று
கழிந்துகொண்டது உன் வீரம்.

உன்னைக் காணாத சந்ததிகூட
உன்பெயர் சொல்லிப்போராடும் மாண்பினை
நிகழ்த்திவிட்டுப் போனமையில்
நீயொரு வரலாற்று அதிசயமே.

ஏதோ இரண்டு கவிதை வரிகளுக்குள்
எளிதாக உன்னை அடக்கிவிடலாம் என்ற
அவாவுக்குள்
வெட்கித்து நிற்கிறேன் நான்.

உண்மைதான்,
உன் தியாகம் என்பது
இரண்டு வரிகளுக்குள் அல்ல,
எத்தனை யுகங்களிலும்
எவராலும் நிகழ்த்தப்பட முடியாதது.

தேவன்

SwissLife
Select



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

சுவிசில் சொந்த வீடு வாங்க
விரும்பும் உறவுகளே, அவதானமாகச்
செயற்படுங்கள்.உங்கள் கடனுக்கான வட்டி
வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும்.
எனவே, சரியான வங்கியையும், வட்டி
வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும்
உங்களோடு கரங் கோர்க்கும்
ஒரேயொரு நிறுவனம்...







## அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின்
முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு
ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம்
காப்புறுதி செய்து தருகிறோம்.




குழந்தைகளுக்கான







**Sägestrasse 79**
**3098 Köniz**

Telefon: 031 915 00 50
Telefax: 031 915 00 60
Handy: 079 889 60 65
eMail: Krishnasamy.Thileepan@swisslife-select.ch
Internet: www.swisslife-select.ch

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி

பாகம் 2

புதிய புதிய உணவுகளை ருசி பார்ப்பதில் எப்பொழுதுமே மனிதர்களுக்கு விருப்பம் உண்டு. நாக்கு என்பது பல வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.சொல்வதற்கும் ருசிப்பதற்கும் நாக்கு முக்கியமாகின்றது. சொல்வது என்பதில் இரகசியங்களைச் சொல்லுதல் என்பதும் அடங்கும். உணவு என்றவுடன் மனிதனின் மூளை சுவையையே உணருகின்றது.அதனாலேயே உணவகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

நாடுகள் தமக்குள் ஒற்றுமை இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும், ஒற்றுமையாக இருக்க விரும்பினாலும் அடுத்த நாடுகளின் வளர்ச்சிகள் பற்றி அறிவதையும்,அந்த வளர்ச்சிகள் எவ்வாறு உருவாகின்றன என்பதைக் கவனிக்கவும் விரும்புகின்றன.



இவற்றை உளவு பார்க்க அந்தந்த நாட்டு உணவகங்களும் தமது பங்கை ஆற்றுகின்றன. உணவகங்களின் தலைமையக அதிகாரிகளை பயன்படுத்துவதும் சாதாரண பணியாளர்களைப் பயன்படுத்துவதும் நடைமுறையில் உண்டு.

சாதாரண மனிதர்கள் உலக நாடுகளில் உள்ளகச் செயல்பாடுகள் பற்றியோ, ஒரு நாட்டின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகளை மற்றைய நாடுகள் அறிந்து கொள்வது பற்றியோ, எடுக்கும் அணுகுமுறைகளையோ முயற்சிகளையோ அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஒரு நாட்டில் வேறு வேறு நிறுவனங்களின் பெயர்களில் கால் பதித்துள்ள வல்லமையாளர்கள் "ஒரு நாட்டின் உள்ளீட்டுத் தன்மையை அறிந்து கொள்ள பலரை பல வழிகளில் பயன்படுத்துகிறார்கள்.

ஒரு வலுவான சமூகப் பொருளாதரா கட்டமைப்புக்கு மூல காரணமாக இருப்பது பொருளாதாரத் திண்மையும் அந்தந்த நாட்டின் மக்களின் குணாதிசியமும் தேசபக்தியுமே ஆகும். இந்த மூன்றினதும் திடகாத்திரத்தை அறிந்து கொள்வதன் மூலமே ஒரு நாட்டின் அரசியல் கட்டமைப்பைச் சிதைக்க முடியும்.ஜேர்மனியைப் பொறுத்தவரைக்கும் ஐரோப்பிய சாம்ராஜத்தை உருவாக்கிய நாடு என்பதில் எவ்வித மாற்றுக் கருத்து இல்லை.

ஒரு நாடு தனது தலைமைத்துவத்தைப் பேணுவதற்கும், தன்னோடு இணைந்து செயல்படுவதற்கு மற்றைய நாடுகளைச் சம்மதிக்க வைப்பதற்கும் வலுவான காரணங்கள் வேண்டும். தனது தலைமைத்துவத்தின் இறுக்கமான தன்மையை தனது நாட்டு சராசரி குடிமகனின் வாழ்வினை அடையாளப்படுத்தி காட்ட வேண்டிய அவசியமான நிலை உண்டு.

வல்லரசு நாட்டுக்கு சவாலான நாடு ரஸ்யா என்று ஒரு கருத்து

நிலவுகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் உருவாவதற்கு முன்னர் ஒருங்கிணைந்த சோவியத் யூனியன் சவாலான நாடாகவே இருந்தது.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருங்கிணைவுக்குப் பிறகு இன்னொரு சவாலான சாம்ராஜ்யம் ஐரோப்பிய ஒன்றியமுந்தான்.அதே வேளை ரஸ்யா இன்னமும் தனது வல்லரசு வகிபாகத்தை இழக்கவில்லை.

தனக்கு மேல் எந்த நாடுமே இருக்கக்கூடாது என்பதில் வல்லரசு மிக விழிப்பாகவே இருக்கின்றது.இதற்கு இலுமினாட்டிகளின் உதவி தாராளமாகவே கிடைத்து வருகின்றது.

மேலேகூறிய உணவகங்கள் உளவு பார்த்தலுக்கு எவ்வாறு ஒத்துழைக்கின்றது என்பதற்கு உள்ளங்கை நெல்லிக்கனி என்பது போல வெளிப்படையாகவே ஒரு விடயம் தெளிவாகின்றது. அத்தனை உணவகங்களும் வல்லரசின் நிறுவனங்களே.

ஒரு நாட்டுக் குடிமகனின் தேசபக்தியை சிதைத்து உளவு பார்க்க முடியுமா என்பது ஒரு நியாயமான கேள்வி. ஒரு திணைக்களத்தில் வேலை செய்யும் அதிகாரியை நேரிடையாக உளவு சொல்பவராக இந்நிறுவனங்கள் பயன்படுத்தாது.

உணவு நிறுவனங்களில் பணிபுரியும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அரசின் திணைக்கள அதிகாரிகளுடனோ சாதாரண பணியாளர்களுடனோ ஏற்படுத்திக் கொள்ளும் இயல்பாக தோன்றிய நட்பாகவோ அல்லது தொடர்பாகவோ தோன்றினாலும் அது ஒரு தேவைகருதியே ஏற்படுத்தப்பட்டதாகவே இருக்கும், அது உளவு பார்ப்பவருக்கு மட்டுமே தெரியும்.

வல்லரசு நாட்டின் உளவு பார்க்கும் செயலுக்கு ஒரு ஒப்புவமையைச் சொல்லலாம்."இந்தக் குளத்தில் எந்த மீனுமே இருக்காது" என பொதுவாக நினைக்கையில் "அந்தக் குளத்திலும் வல்லரசு தூண்டிலைப் போட்டு வைக்கும் என்பர். ஏனெனில் எங்கேயாவது ஒளிந்திருக்கம் மீன் எப்போதாவது தூண்டிலில் சிக்கும் என்பதற்காகவே.


இங்கே தூண்டில் என்பது உளவு பார்த்தல் மீன் என்பது கட்டமைப்பு இரகசியம்.ஒருவருடன் ஒருவர் இயல்பாக ஒரு திணைக்களத்தின் செயல்பாடு பற்றிப் பேசிக் கொள்வது என்பது ஒன்றுக்கும் உதவாத விடயமாகத் தோன்றினாலும் அது வல்லரசின் அரசியல் நகர்த்தலுக்கு இரகசியமே.

வல்லரசு ஒரு நாட்டின் மீது கண்ணுக்குத் தெரியாத வலையை விரித்துவிட்டு அந்த வலைக்கட்டமைப்பில் ஒரு நாட்டின் கட்டமைப்பையும் பகுதி பகுதியாகப் பிரித்து, பிரித்த பகுதிகளை இன்னும் பல பகுதிகளாகப் பிரித்து ஆராயத் தொடங்குகிறது.

இதை இப்படிப் பார்க்கலாம். ஒரு நாட்டின் வரைபடத்திற்கு மேல் குறுக்கும் நெடுக்குமாக கோடுகள் இடப்படும் போது சற்சதுர வடிவிலோ நீள்வடிவிலோ பல பகுதிகள் உருவாகும்.

இதையே ஒரு நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு, கனிமவளங்கள், தொழிற்சாலைகள், கல்விநிறுவனங்கள், விஞ்ஞானக் கழகங்கள், மருத்துவ நிலையங்கள், மருத்துவக் கட்டமைப்பு போன்றவற்றை இந்த வலைவிரிப்புக்குள் கொண்டு வருதலும்,அவற்றை பகுதி பகுதியாக பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் உள்ள அவை சார்ந்த அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதலும் ஆகும்.

உணவகங்கள் மீதான மக்கள் வைத்திருக்கும் தொடர்பு அவர்களை இசைவாக்கம் பெற்ற மனிதர்களாக மாற்றிவிடுகின்றது.இந்த இசைவாக்கத்திற்கு உள்ளாவதன் மூலம் எவ்வித பாதிப்பும் ஒரு நாட்டுக்கு ஏற்படாது என்று பொதுப்படையாகக் கருதினாலும்



பாதிப்பு ஏற்படுத்தல் என்பதே வல்லரசின் நோக்கம். இசைவாக்கம் என்பது வல்லரசின் உத்திமுறை.

ஒரு தாளில் ஒவ்வொரு உணவகத்தையும் ஒரு புள்ளியாக இட்டு, அவ்வுணகங்களில் உண்போரை அப்புள்ளியைச் சுற்றி முதலில் சிறிய வட்டம் எனத் தொடங்கி, பெரும் வட்டங்களாக வளர்ந்துவிடும்;. உதாரணமாக ஒரு கோடி மக்கள் இருக்கும் நாட்டில் அந்த ஒரு கோடி மக்கள் மத்தியில் உணவகங்களை புள்ளிகளாக இட்டு, அந்தப் புள்ளியை சுற்றி வட்டமாக வளையங்களை ஏற்படுத்திக் கொள்ளும் போது ஒவ்வொரு உணவகப் புள்ளி வளையங்களும், இன்னொரு உணவகப் புள்ளி வளையகத்தை தொட்டு நிற்கும் அளவுக்கு வளர்ந்து விடும்.

இந்த வட்டத்திற்குள் அகப்பட்டு நிற்பவர்களை குறுக்கும் நெடுக்குமாக இருக்கும் வலைப்பின்னல் அவர்களை உணவக அனுதாபிகளாக, ஆர்வலர்களாக மாற்றிவிடும். இவர்களிடம் எதேச்சையாக அறியப்படும் தகவல்கள் திட்டமிடப்பட்டுப் பெறும் தகவலேயாகும்.

ஒரு வீட்டுகு;குள் நுழைவதற்காக இருக்கும் வாசல்படிக்கட்டு போல இத்தகவல் வல்லரசுக்கு ஒரு நாட்டின் இரகசியங்களை அறிந்து கொள்ளும் படிக்கட்டேயாகும்.

ஒரு உதாரணமாக" 2020 ஆம் ஆண்டுடன் நிலக்கரி ஒரு நாட்டில் முடிவடைந்துவிடும், அந்த நாடு வேறு நாடுகளில் இருந்து நிலக்கரியை இறக்கும் திட்டத்தைக் கொண்டிருக்கிறது என்பது ஒரு செய்தி.

இது நாட்டு மக்களுக்குச் செய்தி. வல்லரசுக்கு இது தூண்டில் போட கிடைத்த இரகசியம்.

இத்தகவல் எத்திணைக்களம் சார்ந்ததோ, எந்த அமைச்சைச் சார்ந்ததோ நிலக்கரிப் பற்றாக்குறையும் ஈடுகட்ட எடுக்கப் போகும் நடவடிக்கை தொடர்பாக எந்தெந்த அணுகுமுறைகளைக் கையாளப் போகிறார்கள் என்பதைக் கண்டறிவதில் அத்திணைக்களம் ஊடாக அல்லது அமைச்சு ஊடாக "இயல்பியல்" அறிதலைக் கையாளுவார்கள்.

குறிப்பாக உணவகத் தலைமையக அதிகாரிகூட வேறு நாட்டுக்கு உளவு பார்ப்பார். நிலக்கரி அமைச்சகத்தில் வேலை செய்பவரிடம் சில இரகசியங்களை இரகசியம் அல்லாதது போல கேட்டறிவார் பேச்சு வாக்கில்.

சொல்பவரும்"நானென்ன பெரிய ஆளா" என்ற நினைப்பில் மிகச் சாதாரணமாகச் சொல்லிவிடுவார். அதை அவர் "இது ஒரு பெரிய இரகசியமே அல்ல என நினைப்பார். ஆனால் அவர் சொல்லிய தகவலை அந்நாட்டுக்கு எதிரான இரகசியமாக மாற்றி அந்நாட்டின் அரசியல் கட்டமைப்பை சிதைக்க முடியும்.

(தொடரும்)


# SAI TRADER


சுவிஸ் நாட்டில் மொத்த விற்பனையாளரும், ஏக வினியோகஸ்தரும்.

## SAI TRADER GmbH

FRISCH - EXOTISCH - AROMATISCH

**Switzerland**
**Tel.+41 44 885 86 50**
**Fax.+41 44 885 86 51**
**Cell.+41 79 218 70 75**

www.saitrader.com



உங்கள் ஸ்தாபனத்திற்கு மரக்கறி, மீன்வகைகளை மொத்தமாக இறக்குமதி செய்து தர நாட வேண்டிய ஒரே இடம்

SAI TRADER GmbH


சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்
NS Jewellery & Textiles
தாலி மற்றும்
பொன்னுருக்குதல்
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்!
ஒவ்வொரு வருடமும் தை
மாதம் எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100CHF என 12
மாதம் 1200CHF. இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவுசெய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerlan
www.nsjewellery.com
info@nsjewellery.com
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52


GUARANTEE
BEST PRICE
GUARANTEE
உயர்தர
புடவைகள்
மற்றும்
துணி வகைகள்
வாங்க
சிறந்த இடம்
Rani palace
Tel: 044 440 60 52
044 440 60 52
ranipalace60@gmail.com
Neugasse 60, 8005 Zürich - Switzerland




# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

**தேவன்**

முள்ளிவாய்க்கால் போன்ற இன்னொரு அழிவு பர்மா நாட்டில் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பர்மா நாட்டில் சிறுபான்மையினரான ரோகிங்கியா என்றழைக்கப்படும் இனத்தைச் சேர்ந்த இசுலாமியர்கள் படுகொலைசெய்யப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கேயும் பௌத்தமே விளையாடுகிறது. கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருக்கும் நாடு பற்றி, ஐ.நா இப்பொழுதுதான் சிறிது கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் படுகொலையே ஏகாதிபத்தியங்களின் திட்டமிடலில்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதால் அவர்களின் தூதுவனான ஐ.நா அதிகமாக ஒன்றும் அதைப்பற்றிக்கவலைப்பட வாய்ப்பில்லை. இந்தப் படுகொலைகளுக்குப் பின்னால் முதலாளித்துவம் விளையாடுகிறது. அதுவும், ஒரு விடுதலைப் போராளியாக வாழ்ந்து, ஏறக்குறைய 21 வருடங்களை வீட்டுச் சிறையில் கழித்து, பர்மாவின் இரும்புப் பெண்மணி என்று மகுடம் சூட்டப்பட்டு, நோபல் பரிசு பெற்ற ஆன் சான் சூகி என்ற பெண்மணியை வைத்தே இந்தப் படுகொலை இயக்கப்படுகிறது என்றால் நம்பமுடிகிறதா..?

கடந்த 2012 ஆம் ஆண்டில் ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் செய்த அமெரிக்க அதிபர் ஒபாமா அவர்கள், பர்மா நாட்டிற்குச் சென்றிருந்த வேளையில், அந்நாட்டில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தது விடுதலை செய்யப்பட்ட "ஆன் சான் சூகி" என்ற பெண்மணியைச் சந்தித்தார். பர்மாவின் அரச இராணுவத்தின் கொடுமைகளை எதிர்த்துப்போராடியவர் என்ற காரணத்திற்காகவே ஆன் சான் சூ கி கைதுசெய்யப்பட்டிருந்தார். விடுதலையின் பின்பாக, தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் பிரதமருக்கு நிகரான அரச ஆலோசகர் என்ற பதவியிலேயே அமரமுடிந்தது. இந்த தேர்தலில் ஆங் சான் சூகியின் ஜனநாய தேசிய கட்சி (என்.எல்.டி.) இரண்டு சபைகளிலும் 80 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்றது. ஆன் சாங் சூகியின் கட்சி பெருவாரியான வித்தியாசத்தில் வெற்றி பெற்றாலும் அவருடைய கணவர் வெளிநாட்டை சேர்ந்தவர் என்பதாலும், அவருடைய இரண்டு மகன்களும் வெளிநாட்டில் இருப்பதாலும் அவரால் அதிபராக முடியாது. அந்நாட்டு அரசியல் சட்டப்படி வெளிநாட்டை சேர்ந்தவரை திருமணம் செய்தாலோ, அவரோ அல்லது அவரின் குழந்தைகளோ நாட்டின் உயரிய பதவியை வகிக்கமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது. அதனாலேயே அரா ஆலோசகர் என்ற பதவியை அவருக்குக் கொடுக்க அரசு முன்வந்தது . அது சற்றே அதிகமான அதிகாரங்களைக் கொண்டதாக இருக்குமாறு அமெரிக்கா உத்தரவிட்டிருக்கக் கூடும் என்றும் சொல்லமுடியும்.

யார் இந்த ஆன் சான் சூகி..? ஆங் சாங் சூ கி, 1945 ஆம் ஆண்டு, ஜூன் 19ஆம் தேதி ரங்கூனில் பிறந்தார். அப்பா, பர்மாவின் நவீன ராணுவத்தை உருவாக்கிய பெருமைக்கு உரியவர். ஆங்கிலேயரிடம் இருந்து பர்மா விடுதலை பெற, முக்கியக் காரணமாக இருந்தவர். விடுதலை பெற்ற ஆண்டே எதிரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டது சோகத்தின் உச்சம். சூ கிக்கு அப்போது இரண்டு வயது. அதன் பின்னர் பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் தனது கல்வியைத் தொடர்ந்த சூகி, பிரித்தானியரை மணந்தார். அதன் பின்னர் தனது தாயாரைப் பார்ப்பதற்கென பர்மா சென்ற சூகி

அங்கேயே தங்கிவிட முடிவு செய்து, "சனநாயக லீக்" என்ற கட்சியைத் தொடங்கினார். அதுவே அவர் வீட்டுச் சிறையில் வைக்கப்படக் காரணமாயிற்று. 1995 இல் அவரது கணவர் பிரித்தானியாவில் மரணப்படுக்கையில் இருந்தவேளையில் சூகி அவர்கள் பிரித்தானியா சென்றுவர அனுமதி கேட்டபோது, "போகலாம், ஆனால் திரும்பி இங்கே வரமுடியாது.." என்று அரசிடமிருந்து பதில் வர சூகி செல்லவில்லை.

கண்களைத்துடைத்துக்கொண்டு மக்களின் விடுதலையே தன் விடுதலை என்று சொல்லியபடி சனநாயகப் போரில் குதித்தார். அந்தவேளையில் தான் அமெரிக்க அதிபர் ஒபாமா வந்து சூகியைச் சந்தித்தார். இரும்புப் பெண்மணியினுடனான சந்திப்பு சாதாரணமாகவே நிகழ்ந்தது என்ற ஒற்றைவார்த்தையில் அது முடிந்துபோனது. ஆனால், இன்று நடப்பவையோ ஏராளம்.

ஆன் சான் சூகி அடிப்படையில் ஒரு பௌத்தமதவாதி. பெண்ணியம் மற்றும் விடுதலை பேசும் மதவாதி என்றும் சொல்லமுடியும். ரோகிங்யா மக்கள் வாழும் பகுதியானது பாகிஸ்தானுக்கும் வங்காளதேசத்திற்கும் இடைப்பட்டபகுதியாகும். இந்த இடத்தில் சகல வசதிகளுடன் கூடிய கண்காணிப்பு நிலையம் ஒன்றை அமைக்க அமெரிக்க அரசு திட்டமிட்டிருந்தது. இதன் விளைவாக, யாரைக்கொண்டு இதற்குரிய செயற்பாடுகளை முடுக்கிவிடமுடியும் என்பதை அவதானமாக ஆராய்ந்து வருகிறது ஏகாதிபத்தியம். இந்த இடத்தில் இருந்தபடி ஆசியாவின் முழுப்பகுதி மற்றும் இரசியாவின் ஒரு பகுதி ஆகியவற்றை அணுவணுவாக ஆராய்ந்துவிடமுடியும். இந்த இடத்தைப் பெறுவதற்கான வழி என்ன..? கூர்ந்து பார்த்தால் கண்ணுக்குத் தெரிந்தது ரோகிங்யா மக்களே. ஏற்கனவே அவர்கள் மீதான இனப்படுகொலை நீண்டகாலமாக அமைதியாக நடந்துவருகிறது. ஈழத்தைப் போல ஒரே தடவையில் கொலைசெய்யாது, கொஞ்சம் கொஞ்சமாக நீண்டகாலமாக கொலை செய்து முடிப்பதே அவர்கள் திட்டம். இந்த இடத்தைக் கையகப் படுத்திக்கொள்ள ஒரே வழி, அந்த மக்களை ஒரேயடியாக முடிப்பதுதான். முடிப்பதற்கு முன்பாக அங்கே சனநாயகம் பேசிக்கொண்டிருக்கும் முதற்பெண்மணியான சூகியைக் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டுமே. அதுதான் ஒபாமா மற்றும் சூகி சந்திப்பாக நடந்துமுடிந்திருந்தது.

பௌத்த மதகுருமார்கள் கையில் ஆயுதங்களுடன் அலைகிறார்கள். கையில் அகப்படும் இசுலாமிய மக்களை வெட்டியும், சுட்டும் வேட்டையாடுகிறார்கள். அல் யசீரா தொலைக்காட்சி வெளியிடும் காட்சிகளைப் பார்வையிட முடியவில்லை. வங்காள தேசம் நோக்கி ஓடும் மக்களை, வங்காள தேசத்தின் எல்லை இராணுவம் தடுத்துவைத்திருக்கிறது. எல்லையில் ஒரு முகாமிட்டு அங்கேயே மக்கள் வாழ்ந்துவருகிறார்கள். 80,000 க்கும் அதிகமான சிறுவர்கள் போதிய உணவின்றி நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தப்பிச்செல்ல இருக்கும் ஒரேவழி வங்கக்கடல் மட்டுமே. அங்கேயும் பயணவழியில் அவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில், ஒரு விடுதலைப்போராளியான ஆன் சான் சூகி அவர்கள் இந்த இனவழிப்பைப் பற்றிக் கூறும் கருத்து என்ன தெரியுமா..? "அவர்கள் (ரோகிங்யா) தமது இனத்துக்குள்ளேயே பிளவுபட்டு மோதிக்கொண்டு அநியாயமாகச் சாகிறார்கள். அதை முடிவுக்குக் கொண்டுவரும் தகுதி என்னிடம் இல்லை.." இதுதான் அவர் கூறியிருக்கும் வசனம். உலக அளவில் மனித உரிமையாளர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் இந்தக் கூற்று உண்மையில் அவர் ஒரு பௌத்த மதவாதி என்பதனை அப்படியே புடம் போட்டுக்காட்டுகிறது. உண்மையில் ஒரு போராட்ட வாழ்வியலின் அடிப்படையில் வளர்ந்த அவர், எந்த மதச்சார்பின்மையும் இன்றி ஒரு இனத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் ஆட்டுவிப்பது அமெரிக்கா என்பதால் அம்மணியின் பேச்சு அப்படிப்போகிறது.

இந்த மக்களின் வாழ்க்கை, இலங்கையின் மலையக மக்களை நினைவுபடுத்துகிறது. மலையக மக்கள் போல, இவர்களுக்கும் இன்னமும் குடியுரிமை கிடையாது. வங்காள தேசத்திலிருந்து வேலைக்கு வந்தவர்கள் இங்கே தங்கிவிட்டார்கள் என்று துவேசமாகப் பேசும் ஒரு புத்த பிக்குவின் காணொளியைப் பார்த்தேன். வங்காளதேசமோ இவர்கள் எமது நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று கையைவிரித்துவிட்டது. இந்த மக்கள் அழியும் வரை வேடிக்கை பார்க்கும் உலகம், அதன் பின்பு பர்மா இனஅழிப்பு நாடு என முன்மொழியக்கூடும். வெறும் முன்மொழிவுகளால் மனித உயிர்கள் திரும்பி வந்துவிடப் போகிறதா..?

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide, Radio-schedules, contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in



அனைத்து
பொருட்களும் எங்கள்
சொந்த தயாரிப்பு
தரமான பொருட்கள்
மலிவு விலையில்
AKM
IMPORTS
கலப்படங்கள் எதுவும்
இன்றி சுத்தமாக
தயாரிக்கப்பட்டது
AKM ASIAN FOOD GmbH
ALPENSTRASSE 1
3072 OSTERMUNDIGEN
CH-BERN-SWITZERLAND
TP:031 931 25 25/078 802 72
www. Akmasian.com
விறகடுப்பில் தயாரிக்கப்பட்டது
Alpenstr.1,
3072 Ostermundigen
Tel. 031 9312525
(Bern Nilavani)
Basel Str. 80,
6003 Luzern
Tel. 041 2405400
தமிழர்களுக்கு தேவையான அனைத்து
விதமான உணவுப் பொருட்களின் மொத்த,
சில்லறை விற்பனை நிலையம்
A.K.M முத்திரைபதித்த அனைத்து பொருட்களையும் ஒரு முறை சுவைத்தால்
ஈழத்து சுவை உங்கள் நாவில் ஆழமான தனிச்சுவைதரும்!

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்



தளபதி
விஜய்
நடிக்கும்

# 2 GET FREE TICKETS

*T&C Apply

## WHEN YOU BUY A NEW STB

விஜய் தமிழ் KTV SUN MUSIC Athavan TV Lyca HD

TENT KOTTA + EROSNOW

7000க்கும் அதிகமான புத்தம்புதிய
TAMIL & HINDI திரைப்படங்கள்

மெர்சல்

ஒரு வருட இணைப்புச் சந்தா

CHF 119



SET TOP BOX INCLUDED

- SALES -
077 955 9430

- CUSTOMER SERVICE -
044 555 2320

www.lycatv.tv

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

பாகம் 67

-அன்புச் செல்வன்-

ஈழம் என்பது தமிழரது தாயக பூமி. வரலாற்று மற்றும் மானுடவியல் ஆய்வாளர்களின் இக்காலத்திய முடிவாக இதுவே தமிழ் இனத்தின், இன்றைய மனித குலத்தின் பிறப்பிடமாக அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டிய அளவுக்கு ஆதாரங்கள் உலகெங்கும் பரந்து பரவிக் கிடக்கின்றன. உலக மனித குலத்தின் பண்பாட்டு கலாச்சார நாகரித்தின் தோற்று வாயாக ஈழம் எனப்படும் இலங்கைத் தீவும் அதன் கடல் விழுங்கி விட்ட நிலப் பகுதிகளுமே ஆதாரப்படுத்தப் பட்ட உண்மைகளாக உள்ளன.

லெமுரியா அல்லது குமரிக் கண்டம் அல்லது மூநாடுதான் ஈழமும் தமிழ் மக்களும் என்ற உண்மை உலகம் பேசு பொருளாக ஏற்றுவிட்டது. அத்தகைய பெருமைக்கு உரிய தேசத்தினதும் மக்களினதும் பூர்வீக சொந்தக்காரர்தான் தமிழ் ஈழ மக்களும் அவர்களது அரசியல் விடுதலைக்கான போர்தான் இங்கு நடந்தது.



இதிலே இந்தியாவுக்கோ இத்தாலிக்காரியான சோனியா காந்தியோ இந்திரா காந்திக்கோ அவரது குடும்பத்துக்கோ தலையிட்டு அழிக்க வேண்டிய தேவையும் காரணமும் என்ன? இந்திரா காந்தி எமது உரிமைப் போருக்கு உயிரோடு உள்ள வரை ஆதரவாகச் செயற்பட்டார் என்பது உண்மைதான். அந்த வரைக்கும் எமது மக்கள் அவருக்கு விசுவாசம் காட்டத் தவறியதே இல்லை.

ஆனால் இத்தாலிக்காரியான சோனியாவின் வற்புறுத்தலினால் முள்ளி வாய்க்கால் படு கொலைகள் நடத்தப் பட்டது என்ற பயங்கரமான குற்றச்சாட்டை த ஸ்டேட்ஸ்மன் என்ற பத்திரிகையில் சாம் ராசப்பா என்ற புகழ் பெற்றவரும் அதிகம் உள் விடயங்கள் அறிந்தவருமான இந்திய ஊடகர் 2011ல் வெளிப்படுத்தி இருந்தார்.

மேலும் அச் செய்தியில் இந்திய அரசின் கொள்கைகள் அரச அதிகாரிகளால் தீர்மானிக்கப் படுகின்ற என்ற வெளிப் படையான பிரச்சாரம் உள்ள போதிலும் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரில் சோனியா காந்தியின் விருப்பமே இந்திய அரசின் கொள்கைளைத் தீர்மானித்தது என்ற உண்மை பகிரங்க இரகசியம் எனக் கூறப் பட்டுள்ளது.

ஒரு வகையில் முள்ளிவாய்க்கால் போர் என்பது ஸ்ரீ பெரும்புதூர் கொலைக்கு ஒரு இத்தாலியப் பழி வாங்கலாகப் பார்க்கப் படுகிறது. இதன் காரணமாகத்தான் போரில் தன்னை ஈடுபடுத்தியதும் சர்வதேச சமூகம் கொழும்பு அரசின் மீது எடுத்த கண்டனங்களை தடுத்ததும் ஐ.நா. ஆலோசனைச் சபை அறிக்கையை நீர்க்கச் செய்ததும் சனல் 4 ஆவணப் படத்தை முடக்கியதும் என்கிறது அச்செய்தி.

இங்கே நாம் தீவிர ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய விடயம் ராஜீவ் காந்தி கொலையை தமிழீழ விடுதலைப் புலிகள் செய்தார்கள் என்பதற்கான முழுமையான நேர்மையான நீதி விசாரண மூலம் இன்னமும் உறுதிப் படுத்தப்

படாமல் பன்நோக்கு விசாரணை ஆணையத்தால் ஆய்வுக்கு உள்ளான நிலையே தொடருகிறது.

நேர்மையான விசாரணை இடம்பெற முடியாத படிக்கு மலையாளிகளின் தலையீடுகள் இருந்துள்ளன. டிக்ஸிற் தொடக்கம் இதில் சம்பந்தப் பட்ட இந்திய அதிகாரிகள் அனைவருமே மலையாளிகளாக இருந்துள்ளனர். புலிகள் அரசு அமைதிப் பேச்சின் இராணுவ முகாம்கள் தொடர்பான இணக்கப் பாடுகளை முறியடிப்பதில் மலையாளியான சதீஸ் நம்பயார் இலங்கைப் படைகளின் ஆலோசகராக செயற் பட்டுள்ளார்.

இறுதிக் கட்டப் போரில் புலிகள் சரணடைவதை கவனிக்க என கொழும்பு வந்த ஐ.நா. துணைச் செயலரும் மற்றொரு மலையாளியான விஜய் நம்பியார் போர் முனைக்குப் போகாமலே விமான நிலையத்தில் வெட்டியாக ஒளிந்து கொண்டு வெள்ளைக் கொடியோடு சரணடைய வந்த அத்தனை பேரும் சுட்டுக் கொல்லப்பட காரணமானார். அது மட்டும் அல்ல 8 வயதுப் பாலகனான பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை இராணுவம் கைது செய்து படு கொலை செய்யவும் அவரது பொறுப்பற்ற செயல் காரணமாக அமைந்தது.

1985 முதல் 1989 காலப் பகுதியில் இலங்கையில் இந்தியத் தூதுவராக செயற்பட்டவர் ஜே.என். டிக்ஸிற் என்ற மலையாளியாவார். இவரைத் தொடர்ந்து இலங்கைத் தமிழருக்கெதிரான இலங்கை அரசின் செயற் பாடுகளில் மலையாளிகளின் பங்கு மிக முக்கியமானது.

ஜே.ஆர் ஆட்சியின் போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் நடத்திய பேச்சுகளில் பல சிக்கல்களை ஏற்படுத்தியதில் டிக்ஸிற்றின் பங்கு தீவிரமான மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாக பார்க்கப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

இவரைத் தொடர்ந்து தமிழினத்துக்கு எதிரான அழுத்தங்களும் போர் முனைப்புகளும் தீவிரம் அடைய மலையாளிகளின் ஈடுபாடு அதிகரிக்க என்ன காரணம்.?

ராஜீவ் காந்தியின் படுகொலையைத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளேதான் செய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எவற்றையும் சர்வ தேச மற்றும் பொது நீதி விசாரணைகள் மூலம் கடந்த 30 வருடங்களாக கண்டறியப் படாமலே உள்ளது. எனவே உண்மைக் குற்றவாளிகள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்தான் என இன்னமும் உறுதிப் படுத்தப்படாத நிலையே நிலவுகிறது.



குறிப்பாக இவர் கொழும்பில் இந்தியத் தூதுவராக செயற்பட்ட காலத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. அந்த ஒப்பந்தம் தமிழர் நலனைக் கவனத்தில் எடுக்காமல் இந்தியா தன்னிச்சையாக செய்து கொண்ட ஒன்றாகும். ஒப்பந்த விதிகளுக்கமைவாக கடலில் பயனித்த முக்கிய தளபதிகள் இருவர் உட்பட 12 புலிகளை இலங்கைக் கடற்படை கைது செய்ததும் அவர்களை இலங்கை இராணுவம் கொழும்புக்கு கொண்டு செல்வதை இந்தியப் படை அனுமதித்ததும் அதன் நிமித்தம்12 பேரும் சயனைட் குப்பி கடித்து தற் கொலை செய்ததும் அதனைத் தொடர்ந்து புலிகளை எதிர்த்து இந்திய அமைதிப் படை போர் தொடுத்ததும் மறு பார்வைக்கு உட்படுத்தி உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டியவை.

அவரது படு கொலையுடன் நாம் சம்பந்தப் பட்டிருந்ததும் இல்லை. அதைத் தீர விசாரித்து அதன் பின்புலத்தில் இருக்கக் கூடிய சர்வதேச அரசுகளும் அவற்றின் தலையீடுகள் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய போதிய நியாயப்பாடுகள் காணப்பட்ட பொழுதிலும் அவற்றைக் கண்டறிய வேண்டிய அவசியத்தையும் அதற்கான செயற்பாடுகளையும் இந்திய அரசும் அதன் புலனாய்வு அதிகாரிகளும் மேற்கொள்ளாத காரணம் என்ன?

இலங்கை இனப்பிரச்சினை தீவிரமடைய இந்திய அரசின் தலையீடுதான் முதன்மையான காரணம் என்பதை எவரும் அறிவர். 1987ல் ராஜீவ் காந்தியை இந்தப் போரில் ஈடுபடுத்தியவர் யார் அதற்கான காரணங்கள் எவை?

மேலும் புலன் விசாரணை செய்த இந்தியப் புலனாய்வுத் துறையும் அதனை வழிப் படுத்திய அதிகாரிகளும் பல மட்டங்களிலும் குளறு படிகள் மூலம் நீதியான நேர்மையான விசாரணை இடம் பெறாமல் செய்தனர் என்பது இதுவரை வெளிவந்த செய்திகள் மூலம் உலகம் அறிந்த விடயங்கள்தான். குறிப்பாக கொலை நடந்த இடத்தில் பதிவான காணொளி காட்சிகளை அழித்தும் மறைத்தும் நேர்மையான விசாரணை இடம் பெறாமல் செய்தவர் எம்.கே.நாராயணன் என்ற அதிகாரி.

அவரே தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புப் போரை முன்னின்று நடத்தியவர்களில் முக்கியமானவர் அவருக்கு கிடைத்திருக்கும் பாராட்டுப் பரிசு மேற்கு வங்க மாநில ஆளுநர் பதவி.இவர் மட்டும்அல்ல இன்றைய இந்திய பாதுகாப்பு ஆலோசகரான ஷிவ் ஷங்கர் மேனன், ஐ.நா. துணைச் செயலர் விஜய் நம்பியார், இலங்கைப் படையின் ஆலோசகராகச் செயற்பட்ட சதீஷ் நம்;பியார் எனப் பெரிய மலையாளிகள் கூட்டமே எம் இன அழிப்பில் தீவிரமான பங்களிப்புச் செய்துள்ளனர்.

எமது ஈழத் தாயக அழிப்பில் இத்தனை பேர் குறிப்பாக மலையாளிகள் இந்த அளவுக்கு அக்கறை காட்டவும் இத்தாலிக் காரியான சோனியா காந்தி சட்டத்தை மீறிய செயலாக எமது தாயகத்தையும் மக்களையும் அழிக்க எந்த ஒரு மனிதாபிமானம் நீதி மனித உரிமை விடயங்களில் அக்கறை செலுத்தக் கூடிய மனிமாபிமானம் கொண்ட அனுமதிக்க சம்மதியார். அப்படியாயின் ஈழத் தமிழ் மக்களதாகிய நாம் எமது தனித் தமிழ் கோரிக்கையை உலகமே ஏற்கப் போராட வேண்டாமா?

(தேடல் தொடரும்)

StaR-Impex

9வது ஆண்டில் கால்பதித்திருக்கும் எமது நிறுவனத்திற்கு ஆதரவு வழங்கிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது

மனமார்ந்த நன்றிகள்!



Öffnungszeiten:
Mo-Fr: 10:30 - 19:30
Sa: 9:30 - 18:00

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

Kipper Str. Tor. 03
44147 Dortmund

Tel: 0231 86 02 696

Mobil: 0172 21 83 703
Fax: 0231 86 02 698
E-Mail: star-impex@live.de
Web: www.star-impex.net



பூமிபுத்ரன்

# வட கொரிய விவகாரம் - பலசாலி யார்?

கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள கொதிநிலை தற்போதைக்குத் தணியும் அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. வட கொரியா மீதான தாக்குதலுக்குத் தாம் தயார் நிலையில் இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த பின்னரும் கூட, மற்றுமொரு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை யப்பான் நாட்டின் மேலாக வட கொரியா பரீட்சித்திருப்பதானது 'விடாக் கண்டன் கொடாக் கண்டன்" என்ற சொலவடையை நினைவு படுத்துவதாக உள்ளது. ஆதேவேளை, ஏவுகணை ஏவப்பட்ட நாளானது 1910 முதல் 1945 வரை கொரியாவை ஆக்கிரமித்திருந்த யப்பான், தனது ஆக்கிரமிப்பை ஆரம்பித்த நாளை நினைவு கூர்வதாகவும், உலகிலேயே அணு ஆயுதத் தாக்குதலுக்கு இலக்கான ஒரேயொரு நாடு யப்பான் என்பதை நினைவூட்டுவதாகவும் அமைந்திருந்ததாக நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

மறுபுறம், அமெரிக்காவில் மிக மோசமாகச் சரிந்துவரும் தனது செல்வாக்கை உயர்த்துவதற்காக ட்ரம்ப் ஏதாவது செய்தே ஆக வேண்டிய நிலையில் உள்ளதால், அமெரிக்காவின் அடுத்த போர் வட கொரியாவில் இடம்பெறக் கூடுமா என்கின்ற விவாதங்கள் மைய நீரோட்ட ஊடகங்களின் செய்திகளாக மாறியுள்ளன.

பொதுவாக, போர்களை வெறுக்கும் மக்களின் எண்ணிக்கையே நவீன உலகில் அதிகமாக உள்ளது. சமாதானத்தின் மீதும், நீதியின் மீதும் உள்ள வாஞ்சையினால் மாத்திரம் அவர்கள் போர்களை வெறுக்கவில்லை. மாறாக, தமது அன்றாட வாழ்வில் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் கவனத்திற் கொண்டே அவர்களுள் பெரும்பாலானோர் போர்களை வெறுத்து வருகின்றனர். தங்களைப் பாதிக்காத போர்களை அவர்கள் எப்போதும் வரவேற்றே வந்துள்ளனர். அது ஈராக் மீதான படையெடுப்பாக இருந்தாலும், ஆப்கானிஸ்தான் மிதான ஆக்கிரமிப்பாக இருந்தாலும், லிபியா மீதான தாக்குதல்களாக இருந்தாலும் மேற்குலக மக்கள் அவற்றை வரவேற்கவே செய்துள்ளனர்.

'அவலத்தைத் தந்தவனுக்கே அவலத்தைத் திருப்பித் தருதல்" என்ற அடிப்படையில், போர்களினால் பாதிப்புக்கு இலக்கானவர்கள் மேற்குலக மண்ணில் தாக்குதல்களை நடாத்தும் வேளைகளில் மாத்திரமே இத்தகையோர் போருக்கு எதிரானவர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ள விரும்புகின்றனர்.

வட கொரியா விவகாரத்தைப் பொறுத்தவரை வட கொரியா மீதான தாக்குதலை அவர்கள் முழுமனதாக ஆதரித்தாலும் கூட அவர்கள் போருக்கு எதிரானவர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்வதற்கான காரணம் வட கொரியா வசம் இருப்பதாக அஞ்சப்படும் அணு ஆயுதங்களும், அவற்றை கண்டம் விட்டுக் கண்டம் எடுத்துச் செல்வதற்காக அந்த நாட்டிடம் உள்ள தொழில்நுட்பமுமே. வட கொரியா மீதான தாக்குதல் 'குளவிக் கூட்டிற்குக் கல்லெறிந்த கதையாக" மாறிவிடுமோ என்ற அச்சம் அவர்கள் மத்தியில் உள்ளது.

இத்தகைய அச்சம் அமெரிக்க தலைமையிலான மேற்குலக அரசுகளிடமும் உள்ளது. வட கொரியாவின் அணு ஆயுத உற்பத்தி விவகாரம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஒரேயொரு நடவடிக்கை பொருளாதாரத் தடை மாத்திரமே. ஈராக்கில் செய்ததைப் போன்றோ ஆப்கானிஸ்தானில் செய்ததைப் போன்றோ ஒரே இரவில் வட கொரியா மீதான தாக்குதலை அமெரிக்கா இதுவரை தொடுக்காமைக்குக் காரணம் அச்சமே.

'நீ என்ன ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதை உன்

எதிரியே தீர்மானிக்கின்றான"; என்பது சீன விடுதலைத் தலைவர் மாவோ சேதுங்கின் கூற்று. இன்று வடகொரியா என்ன விலை தந்தாவது அணு ஆயுதத்தை உற்பத்தி செய்தே தீருவேன் என நிற்பதற்குக் காரணம் அமெரிக்காவே.

ஆனால், பொதுவெளியில் வட கொரியாவிற்கு எதிரான கருத்துக்களே பெரிதும் விவாதிக்கப் படுகின்றன. மேற்குலகின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஊடகங்கள் தெளிவாகச் சொல்வதானால் ஆயுத உற்பத்தியாளர்களின் செல்வாக்கிற்கு உட்பட்ட பன்னாட்டு ஊடகங்கள் உலகின் சகல பகுதிகளிலும் ஆயுத மோதல்களை ஊக்குவிப்பதிலும் வரவேற்பதிலும் முன்னின்று உழைத்து வருகின்றன. அமெரிக்க நலன்கள் என்பதே உலக நலன் என நிறுவ விழையும் இத்தகைய ஊடகங்கள், அமெரிக்காவின் ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்குச் சவால்விடும் நாடுகளை 'முரட்டுத் தேசங்கள்" என வர்ணித்து அவற்றுக்கு எதிரான விஷமப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றன. மேற்குலகின் அத்தகைய பட்டியலில் உள்ள ஒரு நாடே வட கொரியா.

பகிரங்கமாக ஏற்றுக் கொண்டும் ஏற்றுக் கொள்ளாமலும் உலகின் பல நாடுகள் அணு ஆயுதங்களைக் கைவசம் வைத்துள்ள நிலையில், ஈரான் மற்றும் வட கொரியா போன்ற நாடுகளின் அணுத் திட்டங்களை மாத்திரம் இலக்கு வைத்து அமெரிக்காவும், மேற்குலகமும் வரிந்து கட்டிக் கொண்டு தடுக்க நினைப்பது ஏன் என்பது இலகுவாக ஊகித்துக் கொள்ளக் கூடியதே. தனக்குப் பாதுகாப்பான கோதாவில் நின்று கொண்டு எதிரியை வீழ்த்துவது என்பது அமெரிக்காவிற்குக் கைவந்த கலை.

இதற்கு அண்மைக்கால உதாரணங்களாக யூகோஸ்லாவியா, ஈராக் மற்றும் லிபியா மீதான தாக்குதல்களைக் கொள்ளலாம். இந்த மூன்று நாடுகளிடமும் அமெரிக்காவைத் தாக்கக் கூடிய வல்லமை கொண்ட அணு ஆயுதங்கள் இருந்திருந்தால் அத்தகைய தாக்குதல்கள் நடைபெற்று மூன்று நாடுகளினதும் தலைவர்களும் கொல்லப்பட்டு இருப்பார்களா?

இந்த மூன்று நாடுகள் விடயத்திலும் அமெரிக்கா பாரிய அச்சுறுத்தல்களை தொடர்ச்சியாக விடுத்து வந்த போதிலும், தனக்கு ஆபத்துக் குறைவு என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட நிலையிலேயே தாக்குதல்களைத் தொடுத்தது.

யூகோஸ்லாவியா மீதான விமானத் தாக்குதல்கள், பெருமளவிலான கனிம வளங்களைக் கொண்ட கொசோவாவை இலக்கு வைத்தே நடாத்தப்பட்டன. அன்றைய தருணத்தில் ரஸ்ய அதிபர் போரிஸ் யெல்ட்சின் யூகோஸ்லாவியாவிற்கு நேசக்கரம் நீட்டியிருந்தால் மிலோசவிச் தப்பிப் பிழைத்திருப்பார். சோவியத் யூனியனின் உடைவை அடுத்து உள்நாட்டுப் பிரச்சனைகளைச் சமாளிக்கவே முடியாத நிலையில் ரஸ்யா இருக்கையில், யூகோஸ்லாவியா விவகாரத்தில் ரஸ்யா தலையிடாது என்பதைத் தெரிந்து கொண்டே மேற்குலகம் அங்கே தாக்குதல்களைத் தொடங்கியது.

ஈராக் விவகாரத்தில், சதாம் உசேன் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக மேற்குலகம் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வந்த போதிலும், சதாம் அரசாங்கம் அதனைத் தொடர்ச்சியாக மறுத்தே வந்தது. சதாம் கூறுவது முற்றிலும் உண்மை என்று தெரிந்த நிலையிலும், வளைகுடா யுத்தம் காரணமாக ஈராக்கிய விமானப் படை முற்றுமுழுதாகச் செயற்பட முடியாத நிலையில் இருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்ட நிலையிலுமே அமெரிக்காவின் படையெடுப்பு நிகழ்ந்தது. ஒப்புக்கேனும், தங்களிடம் பேரழிவு ஆயுதங்கள் இருக்கின்றன என சதாம் கூறியிருந்தால் ஈராக் மீதான படையெடுப்பு நிகழ்ந்திருக்குமா என்பது கேள்விக் குறியே.

லிபியாவைப் பொறுத்தவரை அமெரிக்காவின் பரமவைரியான கேணல் கடாபி, பேரழிவை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை உருவாக்குவதில் நாட்டங் கொண்டிருந்தார். ஈரானைப் போன்று 'இஸ்லாமிய அணுகுண்டு" என வர்ணிக்கப்பட்ட அணு ஆயுதத்தை உருவாக்குவதிலும் முயன்றார். ஆனால், 'அடுத்துக் கெடுத்தல்" என்ற தந்திரத்தைப் பயன்படுத்திய அமெரிக்கா, பொருளாதாரத் தடைகளை நீக்குதல் என்ற ஆசைவார்த்தையைக் காட்டி லிபியாவின் பேரழிவு ஆயுதத் திட்டத்தை 2003 இல் கைவிடச் செய்தது. அப்போதைய அமெரிக்க அரசுத் தலைவர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும், பிரித்தானியப் பிரதமர் டொனி பிளேயரும் கடாபியின் முடிவை வரவேற்றுப் பாராட்டியும் இருந்தனர்.

எனினும், 8 வருடங்களின் பின்னர் அமெரிக்க ஆதரவுத் தீவிரவாதிகளால் கண்டுபிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட தருணத்தில் பேரழிவு ஆயுதத் திட்டங்களைக் கைவிடுவதற்குத் தான் எடுத்த முடிவுக்காக கேணல் கடாபி நிச்சயமாக வருந்தியிருப்பார் என நம்பலாம்.

இத்தகைய பின்னணியிலேயே வட கொரியா விவகாரத்தைப் பொருத்திப் பார்க்க வேண்டும். வட கொரிய அதிபர் கிம் ஜொங் உன் தனது அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிட மறுப்பது, உலகளாவிய அடிப்படையில் அமெரிக்காவை எதிர்த்த தலைவர்களின் அழிவு கடந்த காலத்தில் எப்படி இருந்தது என்பதைக் கவனத்தில் எடுத்ததாலேயே. வட கொரியா மீதான அழுத்தங்கள் அதிகரிக்க அதிகரிக்க, அந்த நாடு மேலும் மேலும் அணு ஆயுத உற்பத்தி விடயத்தில் அதிக கவனம் எடுக்கவே செய்யும்.

அமெரிக்கா போன்ற ஒரு உலக வல்லரசினால் வட

கொரியாவை ஓரிரு மணித் துளிகளில் அழித்துவிட முடியாதா என்ற கேள்வி எழுப்பப் படக் கூடும். இராணுவ வல்லமையைப் பொறுத்தவரை முடியும் என்பதே பதில். ஆனால், அதன் விளைவு, தாக்குதல் ஆரம்பித்து ஓரிரு நிமிடங்களில் என்னவெல்லாம் நடக்கக் கூடும் என்பதிலேயே இது தங்கியுள்ளது.

வட கொரிய எல்லையில் இருந்து வெறும் 26 மைல் தொலைவிலேயே தென் கொரியத் தலைநகர் சியோல் அமைந்துள்ளது. இந்த நகரில் சுமார் 2 லட்சம் அமெரிக்கர்கள் வசித்து வருகின்றார்கள். வட கொரியாவிடம் உள்ள 8000 ஏவுகணைகள் இந்த நகரைச் சுடுகாடாக்கி விடக் கூடும். அது மாத்திரமன்றி வட கொரியா வசம் பாரிய தரைப் படையும் தொண்டர் படையும் உள்ளது. மக்கட் தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் உலகிலேயே அதிகமானோரைப் படைகளில் வைத்துள்ள நாடுகளில் வட கொரியாவே முதலிடம் வகிக்கின்றது. இந்த நாட்டில் 1.1 மில்லியன் ஆயுதப் படையினரும் 1.8 மில்லியன் துணைப் படையினரும் உள்ளனர். இவர்கள் எல்லையைக் கடந்து தென் கொரியாவிற்குள் பிரவேசித்துவிட்டால் விளைவு என்னவாகும் என்பதை விவரிக்கத் தேவையில்லை. அது தவிர பல நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான ஆயுத தளபாடங்களையும் வைத்துள்ள வடகொரியா உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான நீர்மூழ்கிக் கப்பல்களையும் கொண்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க வட கொரியாவின் அமைவிடமும் முக்கியமானது. இந்த நாடு அமெரிக்காவின் எதிரிகள் எனக் கருதப்படும் சீனா மற்றும் ரஸ்யாவின் எல்லையில் அமைந்துள்ளது. இந்த நிலையில் இந்த நாட்டின் மீதான தாக்குதலுக்கு சீனாவோ அன்றி ரஸ்யாவோ சம்மதம் தெரிவிக்காது எனலாம். இதனை இரு நாடுகளும் வெளிப்படையாகவே தெரிவித்து வருகின்றமையையும் அவதானிக்கலாம்.

தற்போதைய நிலையில் கொரியத் தீபகற்பத்தில் பதற்ற நிலையைத் தணிப்பதற்கு இராஜதந்திர அணுகுமுறைகளே அவசியமானதும் பொருத்தமானதும் ஆகும். இத்தகைய கருத்தையே பல நாடுகளும் தெரிவித்து வருகின்றன. அமெரிக்க வெளியுறவுச் செயலாளரும் யப்பானிய வெளியுறவு அமைச்சரும் கூட கூட்டாக இதனையே தெரிவித்து உள்ளனர்.

ஆனால், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கருத்தோ வேறுவிதமாக இருக்கிறது. அவர் படைப் பிரயோகம் பற்றியே அதிகமாகப் பேசி வருகின்றார். அவர் வட கொரியாவை அச்சுறுத்துவதற்காகக் கூறுகிறாரா இல்லை உண்மையிலேயே அவர் படைப் பிரயோகம் மேற்கொள்ள இருக்கிறாரா என்பதை அடுத்து வரும் நாட்களில் தெரிந்து கொள்ள முடியும். ஆனால், அவ்வாறான ஒரு நடவடிக்கை நிச்சயமாக மூன்றாம் உலக யுத்தத்தை நோக்கியதாகவே இருக்கும் என நம்பலாம்.



# BCN·TRAVELS

**Consulting Network**

*Travels·Business·Worldwide*

# விமானச் சீட்டுக்கள் சிறப்பு விலையில்... எம்மிடம்




**Rheinischestr. 72,**
**44137 Dortmund**
**Tel.: 0231/10876361**




## Öffnungszeiten: Mo-Sa 09:00-20:00 Uhr

Last minute Tickets available
on Sunday and Holidays

**துரித பணமாற்றுச் சேவை**

VALUTRANS MONEY TRANSFER | TEMPO | BALU ASIAA Money Transfer | Ria

## நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

**தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல் "Umschuldung"**

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், **60.000€** வரை உடனடி கடன் உதவி!

# வீட்டுக்கடன் 1,2% வட்டிவீதத்திலிருந்து பெற்றுத் தரப்படும்



**50.000 - 122.000 யூரோ**

அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிப் (0,5%) பணத்தைப் பெற்றிடவும், மற்றும் வீடு கட்டுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ தேவையான சகல வங்கிரீயான, சட்டரீதியான (Notar) உதவிகளையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து தருகின்றோம்!


மற்றும் எம்மிடம் அனைத்து விதமான காப்புறுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:
**gothab Finance**
Rheinische Str. 72, 44137 Dortmund
**0231/53375365**
**0231/10876361**
**0152/53961138**
Th. Gobinath

# திலீபன் புரட்சி வாழட்டும்!

தேவன்

சகல வளங்களும் சமமாகப் பொருந்திய ஒரு நாட்டில், போராட்டம் என்பதற்குத் தேவையே இருக்காது. ஆனால் இலங்கைத்தீவில் இது மிகவும் வேறுபாடானது. வரைமுறைகளை மீறிய மனித அவலங்களை ஈழத்தமிழினம் ஏறக்குறைய அறுபது ஆண்டு காலமாக சந்தித்துக்கொண்டே இருக்கிறது. அது மட்டுமன்றி, இந்திய இராணுவத்தின் அடக்கு முறையையும், ஏனைய உலக இராணுவங்களின் அடக்கு முறையை இலங்கை அரசினூடும் சந்தித்தவர்கள் ஈழத்தமிழர்கள். போராட்டத்தின் வழி முறையில் ஒரு முறை அகிம்சை எனப்படும் அன்பு வழிப்போராட்டத்தையும் நாம் சந்தித்தே ஆக வேண்டும் என்ற கோட்பாடுக்கமையவே திலீபன் அன்று பன்னிரண்டு நாட்கள் உணவை ஒறுத்தான்.



காந்தீயத்தின் வழி வந்தவர்கள் வெறுமனே உப்புச்சத்தியாகிரகத்தை மேற்கோள் காட்டி, அதனூடு இந்திய விடுதலை பெறப்பட்டதாக உலக அரங்கில் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளும் வெற்றுத்தனத்திற்கு முற்றுப்புள்ளி இட்டவன் திலீபன். அளப்பரிய தியாகங்கள் நடைபெற்ற எமது விடுதலைப் போராட்டத்தின் தொடங்கு நிலை எப்பொழுதும் திலீபன் மற்றும் கரும்புலி மில்லர் ஆகியோரே. இவர்கள் இருவரும் விதைத்து விட்டுப் போன அந்த நேரிய, உச்சத்தியாகத்தின் தோற்றுவாய் உலகில் எந்த விடுதலைப் போராட்டத்திலும் நடைபெற்றதாக வரலாறு இல்லை.

ஈழத்தமிழர் சமூகத்தின் சாதி மற்றும் பெண்ணிய அடிமைத்தனத்தின் பொறிமுறைகளை வேட்டு வைத்த பெருமை திலீபனையே சாரும். வெற்று வாய்ச்சொல்லில் போராட்டங்களை நடாத்தியவர்கள் மத்தியில் விடுதலைப்புலிகளின் தனித்தன்மையைப் பிரித்துக்காட்டியதில் திலீபன் மற்றும் மில்லர் ஆகியோர் தவிர்க்கமுடியாதவர்கள். ஈழத்தமிழரின் பெண்ணியம் பற்றிய பார்வை, இந்தியாவைப் போன்று மோசமாக இருந்திருக்காவிடினும், அது அமைதிவழிப் பெண்ணியத்தை அதிகம் ஊக்குவித்தது எனலாம். சமய அனுட்டாங்களுக்கும், இல்லறம் பேணுதலுக்கும்

பெண்களை முதற்கருவியாக வைத்துப் பாவித்தலும் ஒருவகையான அடக்குமுறையின் அமைதிப்பொறிமுறை என்பதை உணர்ந்தவன் திலீபன். அவனது மிகச்சிறந்த டுடுகுச்சொமுங்கைடுடுஅரசியல் யாழ்ப்பாண சமூகத்தில் வாழ்ந்த பெண்ணியத்தை போராட்ட வழி முறையையைப் பின்பற்ற வைத்தது எனலாம். ஒரு பல்கலைக்கழக மாணவனுக்கு இருக்க வேண்டிய தெளிந்த சித்தாந்தம் திலீபனை ஆழமாக இயங்க வைத்தது என்பதில் ஐயமில்லை. ஈழத்தமிழர்களின் போராட்டத்தினூடு வரைந்த கோலத்தின் கொள்கையைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் முதற்புள்ளியாக திலீபன் அமைந்தான் என்பதே அவனது பெருமை.

**“மக்கள் புரட்சி வெடிக்கும், சுதந்திர தமிழீழம் மலரும்”** என்பது உலகத் தமிழர்களின் கோட்டொலியாக மாறுவதற்கு திலீபனே அடித்தளமானான். இந்தக்கோட்டொலியானது வெறுமனே அடைக்குமுறையாளருக்கு எதிரான கொட்டொலி அல்ல. அது சமுதாயச் சீர்கேடுகளைத் தகர்த்தெறிந்த கோட்டொலி. முப்பது வருடங்களில், எம்மினத்தின் மூன்றாவது தலைமுறையைக்கூட வெற்றிகரமாக இயங்கவைக்கும் அந்தப்பொறிமுறை திலீபனின் நிகரற்ற அடையாளம். திலீபன் உண்ணாநோன்பு மேற்கொண்ட அந்தக் காலப்பகுதியில் ஒரு உலகவல்லரசின் படைகளுக்கு எதிராக அவன் மேற்கொண்ட, ஈழத்தமிழர்களின் அடையாளமாகப் பரிமாணித்து நின்ற அவனது போராட்ட வாழ்க்கை யாழ்ப்பாண மண்ணில், குறிப்பாக அடித்தட்டு மக்களின் விடுதலை உணர்வை வெகுவாக உசுப்பியிருந்தது.

2009 ஆம் ஆண்டின் பின்னர் மாவீரர் துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்ட பின்னர், திலீபனின் உணர்வே இன்று மீண்டும் ஈழத்தமிழனத்தைப் பரவலாகப் போராடவைத்திருக்கிறது. திலீபன் வெறுமனே ஒரு ஆயுதம் தாங்கிய போராளி என்ற வரையறையிலிருந்து வெளிவந்து, ஒரு பலவீனப்பட்ட சமூகத்தின் உரத்த குரலாக மாறியிருக்கிறான். போராட்டத்தின் மூன்றாவதுதலைமுறை, இராணுவக்கெடுபிடிகளுக்கு அஞ்சாது, அவனது நினைவிடத்தைச் சுத்தம் செய்து விளக்கையேற்றும் உறுதியை அவனது அடையாளம் இந்த மக்களுக்கு வழங்கியிருக்கிறது.

ஒரு விடுதலைப்போராளியினது வாழ்க்கைக்கு முடிவென்பதில்லை. அது நீண்டு வாழும், வாழவைக்கும். முப்பது வருடங்கள் என்பதில் அவன் அடையாளப்படுத்தப்படுவதை விட, மூவாயிரம் வருடங்கள் கடந்தாலும் அவனது உணர்வை எமது தலைமுறைகளில் தங்கியிருக்கச் செய்வதே எமது இன்றைய அவசர அரசியற் பணியாகும். எங்கே ஒரு சே குவேரா வாழ்ந்தாரோ, இன்றும் அவர் அங்கியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், போராட்ட வடிவில் அவரது எண்ணம் அங்கே மழுங்கடிக்கப்பட்டு விட்டது. அந்த மக்களை நவநாகரீக உலகின் அரசியலுக்குள் புகுத்துவதில் அந்த நாடுகள் இன்று வெற்றிகண்டுவிட்டன. சே வின் புகைப்படங்களும் , அவர் பற்றிய நூல்களும் விற்பனையில் உச்சத்தைத் தொடலாம். ஆனால் கொள்கையிலும் செயற்பாட்டிலும் அவர் எவ்வளவு தூரம் வாழவைக்கப்படுகிறார் என்பதே கேள்விக்குறி. இந்தத் தவறினை ஈழத்தமிழினம் இழைத்து விடக்கூடாது என்பதுவே அகரம் குழுமத்தின் வேண்டுகோள். கொள்கையினூடு வெளிப்படுத்தப்படும் திலீபனின் அரசியல் வேணவாவை ஈழத்திமிழினம் இறுகப் பற்றிக்கொள்ளவேண்டும்.







Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்திமஹால் மண்டபம்



சகல விதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும் நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில், அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், மனம் கவர்ந்த, ஒரே அழகிய மண்டபம்...









## திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா

அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

**800 இருக்கை வசதியும் - 400 வாகன தரிப்பிடமும் கொண்ட மண்டபம்.**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K. Kowthaman | S. Manivannan | K. Vijayasuresh |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

Web: www.varasithy-mahall.ch | E-Mail: varasithymahall@hotmail.com



# தமிழின அழிப்பைத் தமிழர்களே மறுக்கும் கொடுமை

நிவேதன் நந்தா

ஒரு இனவழிப்பை மறுப்பதும் இனவழிப்பின் ஒரு அம்சமாகும். தாயகத்தில் நடைபெற்ற மற்றும் நடைபெறுகின்ற தமிழினவழிப்பின் விளைவுகளுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப் போராட்டங்களைத் திசை திருப்பி, தமிழினவழிப்பை மறுத்து, ஈழத் தமிழர்களுக்கும் இலங்கையர்களுக்குமிடையிலான நல்லிணக்க நடவடிக்கைகளை சில அமைப்புகள் மேற்கொள்கின்றன. இவ்வமைப்புகளில் ஒன்றை ஒரு உதாரணமாக எடுத்து, எவ்வாறு தமிழினவழிப்பின் மறுப்பு நடைபெறுகிறது என்பதையும் மற்றும் இந்நடவடிக்கைகளுக்கு எவ்வாறு தமிழர்களே துணைபோகின்றனர் என்பதைப் பார்க்கவுள்ளோம்.

GFBV (Gesellschaft für bedrohte Völker) எனும் அமைப்பு 1970ல் உருவாக்கப்பட்டது. ஜேர்மன், ஆஸ்திரியா போன்ற நாடுகளிலும் இவ்வமைப்பின் கிளைகள் உள்ளன. இவ்வமைப்பின் சுவிஸ் கிளை 1989ல் உருவாக்கப்பட்டது. பழங்குடியினருக்கும் மற்றும் சிறுபான்மையினருக்கும் ஆதரவான போராட்டங்களை நடாத்துவதும், உலகத்தின் பல பாகங்களிலும் நடைபெறும் உரிமை மட்டுப்படுத்தல்களுக்கும் மற்றும் நீதி மறுப்புகளுக்கும் எதிரான போராட்டங்களை நடாத்துவதும் GFBVயின் சுவிஸ் கிளையின் தற்போதய வேலைத்திட்டங்கள் ஆகும்.

இவ்வமைப்பின் சுவிஸ் கிளையின் ஏற்பாட்டில் 02.04.2017 அன்று யாழ் நல்லூரில் நில அபகரிப்பு தொடர்பான ஒரு பட்டறை நடைபெற்றது. இப்பட்டறையில் இலங்கைத்தீவின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் பங்கு கொண்டனர். தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் நில அபகரிப்புகளையும் மற்றும் சிங்கள மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புகளையும் சமப்படுத்த முடியாது. ஆனால் இச்சமப்படுத்தலை இவ்வமைப்பினூடாக அப்பட்டறையின் கருப்பொருளாக்கி தமிழின அழிப்பின் பின்னணியை மறுத்து ஒரு நல்லிணக்கத்தை மேற்கொண்டுள்ளது புகுஃஏ அமைப்பு

அத்துடன் கடந்த 30.08.2017ம் திகதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நிகழ்வுகள் பல இடங்களில் நடைபெற்றன. சுவிஸ் நாட்டின் தலைநகரான "பேர்ண்" நகரிலும் இவ்வமைப்பின் ஏற்பாட்டில் ஒரு நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்விற்குத் தமிழ்த் தேசியம் பேசும் அமைப்புகளும் அனுசரணை வழங்கினர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரையும் மற்றும் இலங்கை அரசை விமர்சித்தவர்கள் காணாமல் போனதையும்

சமப்படுத்திக்காட்டுகிறது புகுஊஏ அமைப்பு. அவ்வமைப்புடன் இணைந்து தமிழ்த் தேசியம் பேசும் அமைப்புகள் இந் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர். இந்நிகழ்வில் கலந்துகொண்டவர் ஒருவர் தெரிவிக்கையில், "தமிழ்த் தேசியம் பேசும் அமைப்புக்களே சிறீசேனாவிடம் நீதிகேட்டு கோட்டொலிகளை எழுப்பிய அதேவேளை தேசியக் கொடிகளைப் பிடிப்பதற்கும் தடை விதித்திருந்தனர்." என்றார்.

தமிழர் தாயகத்தின் ஒருமைப்பாட்டினைச் சிதைப்பதற்காக இந்நில ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தமிழ்த் தேசியவாதத்தின் பிரதிநிதிகள் அல்லது தமிழ்த் தேசியவாதச் சிந்தனையை அடுத்த தலைமுறைக்குக் கொடுக் கூடியவர்கள் என்ற அடிப்படையில் அல்லது அதன் சந்தேகத்தின் பெயரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். மகாவம்ச சித்தாந்தத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியத்தை அழிப்பதை நோக்கமாகக் கொண்டே இவ்வினவழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை மறுப்பது தமிழினவழிப்பின் ஒரு அம்சமாகும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுசரணை வழங்குவது தமிழினவழிப்பை மறுப்பதற்குச் சமமாகக் கருதப்படும். இதனைத் தமிழ்த்தேசியம் பேசும் அமைப்புக்கள் செய்தாலும் கூட அது ஒரு குற்றமாகவே கருதப்படும்.

வெல்வது உறுதி

முக்கிய குறிப்பு: கடந்த ஆனி ஆடி 2017 இதழில் வெளிவந்த "விடுதலைப்புலிகளை அந்நியப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்" என்ற தலைப்பிட்டு வெளிவந்த கட்டுரையின் இரண்டாவது பந்தியின் இறுதியில் "வெள்ளைக்கொடி ஏந்திவந்த விடுதலைப்புலிகள்" என்ற சொற்பதம் தவறாக உபயோக்கிப்பட்டுவிட்டது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம். இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாது என்பதையும் அறியத்தருகின்றோம்.








# Gopara Gnanam

Textiles & Jewellery Shop

**Rheinische Straße 81, 44137 Dortmund**

**Telephone: 0231 5450028 | Mobile: 0171 33 06 542**


சூரிச் மாநகரில்
அபிரா
டெக்ஸ்டைல்
திருமணப்பட்டுப்புடவைகள்,
பட்டு வேஷ்டிகள் மற்றும்
புதிய பஞ்சாபி வகைகள்,
சோளி ஹிட் வகைகள்,
சீகுயின்ஸ் சாறிகள்,
புதிய வகையான சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான கோட், சூட்,
சேட், சர்வாணி வகைகள்
அனைத்தும் நீங்கள்
இதுவரையில் எங்கும்
பெற்றுருக்காத வகையில் மிகுந்த
மலிவு விலையில் கொள்வனவு
செய்யலாம்!
பெண்களுக்கான காப்பு, காதணி வகைகள்
மிக மிக மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்!
Contact:
Stauffacher Str. 149
8004 Zürich
Tel: 043 233 54 54



# மனிதம்

வண்ணை தெய்வம்

செல்லையாவும், சுப்பையாவும், பரம எதிரிகள்! இருவரும் எதிர், எதிரில், சந்திக்கும் நேரங்களில் "நீயா, நானா" என்பது போல இறுமாப்பாக மனதிற்குள் செருமிக்கொள்வார்கள்.

அந்தக் கிராமத்தில் செல்லையாவிற்கும், சுப்பையாவிற்கும், தனித்தனி நண்பர்கள் கூட்டம் உண்டு. செல்லையாவிற்கு வேண்டியவர்கள் சுப்பையாவிற்கும், சுப்பையாவிற்கு வேண்டியவர்கள் செல்லையாவிற்கும், எதிரிகள்தான்.

இப்படி இவர்கள் எதிரிகளாவதற்கு முன்னம் இவர்களைப்போல் இணை பிரியாத நண்பர்களே இருந்ததில்லையென்றே சொல்லாம்! பார்ப்பவர்கள்தான் நண்பர்கள் என்று சொல்வார்களே தவிர இருவருடைய வீடுகளிலும் இவர்கள் அண்ணன் தம்பி போலவே பேணப்பட்டார்கள்!. செல்லையாவின் தாயாருக்கு சுப்பையாவும் சுப்பையாவின் தாயாருக்கு செல்லையாவும் தங்கள் தங்கள் பிள்ளையாகவே வாழ்ந்தார்கள்.

செல்லையாவின் தாயார் இறந்தபோது சுப்பையா கதறி அழுத முகையைப் பார்த்து இறந்தது யாரின் தாயார் என புரியாத அளவிற்கு ஊரே வியந்து பார்த்தது! சுப்பையாவின் தாயார் இறந்த அன்று அவரின் உடல் அடக்கத்திற்காக மயானம் செல்வதற்குள் துக்கம் தாளாமல் செல்லையா மூன்று தடவைகள் மயக்கம் போட்டு விழுந்துள்ளான். இவையெல்லாம் இவர்களின் நட்பின் உச்சக்கட்ட அடையாளங்கள்.

பின்பு இருவரும் திருமணம் செய்துகொண்ட பின் இவர்களின் தாய்மாரைப்போல வந்த மனைவிமார் இல்லாத காரணத்தால் இவர்களின் நட்பின் வேகம் சற்று குறைந்திருந்தாலும் இருவரும் ஒருவரை ஒருவர் என்றும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்!.

இப்படி நகமும் சதையுமாக இருந்த நண்பர்களுக்குள் அப்படி என்னதான் தீராத பகை? அந்த சம்பவம் நடந்து ஏழு வருடங்கள் ஓடி மறைந்து விட்டது.

அன்றொருநாள் மாலை நேரத்தில்....... வயல் வரப்பில் சுப்பையா நடந்து கொண்டிருக்கையில் செல்லையாவின் குரல் அவனை திரும்பிப் பார்க்க வைத்தது.

"சுப்பையா இஞ்சை கொஞ்சம் வாப்பா!"

"நான் அவசரமா போறன் என்ன விஷயம் சொல்லு"

"எட கூப்பிட்டா வந்து என்னண்டு கேக்கமாட்டியா?" அவசரமாக சென்றுகொண்டிருந்த சுப்பையா, செல்லையாவின் குரலிற்குக் கட்டுப்பட்டு அவனை நோக்கி வந்து 'என்ன" என்றான்.

"இதைக் கொஞ்சம் பார் பவுண் மாதிரி இருக்கு" என்று தான் தென்னம் கன்று வைப்பதற்காக கிடங்கு வெட்டும்போது கால் சலங்கைபோல கண்டெடுத்த பொருளை காட்டினான்.

அதை வாங்கிய சுப்பையா திருப்பித், திருப்பி பார்த்தான்.

பின் தனது சால்வையால் நன்றாக துடைத்துப் பார்த்தான். அது பள...பள....என்று ஜொலித்தது. ''செல்லையா இது பவுணை விட உயர்ந்த ரகமா இருக்கவேணும்! எங்கை எடுத்தே" ஆச்சரியமாக கேட்டான் சுப்பையா!

'தென்னம் பிள்ளை வைக்க கிடங்கு வெட்டினன் மண்வெட்டியிலை தட்டுப்பட்டுது" வாயெல்லாம் பல்லு தெரியும்படியாக சிரித்தபடி கூறினான் செல்லையா.

'மச்சான் இது புதையல்! இதை ஒருத்தருக்கும் சொல்லிப்போடாதை! கவுண்மேந்துக்கு தெரிஞ்சா புதையல் சொத்து அரசாங்கத்துக்குத்தான் எண்டு பறிச்சுப் போடுவாங்கள்.

''அப்பிடியா" அப்பாவியாக கேட்டான் செல்லையா.

''நான் இதை நல்ல விலைக்கு வித்துத்தாறன் ஆழுக்கு அரைவாசியா எடுப்பம்".

இதைக் கேட்டதும் செல்லையாவிற்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது .'என்ன விளையாடுறியா? என்ரை தோட்டத்திலை கிடந்ததை நான் கண்டெடுத்தன்! உனக்கேன் அரைவாசி, தரவேணும்? செல்லையா வீறாப்பாக பேசினாலும் சுப்பையாவின் கோபப் பார்வை சற்று தடுமாறத்தான் செய்தது. 'சரி...சரி.. உனக்கும் கொஞ்சம் தாறன்" நாக்கு தடுமாற கூறினான் செல்லையா.

''என்ன கொஞ்சம் தாறியா? சுப்பையா எனக்கு சரி பாதி தராட்டி பொலீசுக்கு போவன்! பேந்து உனக்கும் இல்லை! எனக்கும் இல்லை!"

என்னடா பூச்சாண்டி காட்டிறாய்? வேலிக்குள்ளை போன ஓணானை காதுக்குள்ளை புடிச்சு விட்ட கதையா இருக்கு".

இருவருக்கும் வாக்குவாதம் முத்தியது. மறுநாள் தினசரிப் பத்திரிகைகளில் செல்லையாவின் புகைப்படத்துடன் 'பல நூறு வருடங்களுக்கு முந்திய விலை மதிப்பற்ற மன்னர் காலத்து கால் சலங்கை விவசாயி செல்லையாவின் தோட்டத்தில் புதையலாக கிடைத்தது." என்ற செய்திகள் வெளியாகின.

இருவருக்கும் அன்று ஆரம்பித்த பகை! இன்னமும்



முடியவில்லை.

சுப்பையா தனது தோட்டத்து மா, மரத்தில் ஏறி மாங்காய் புடுங்கியபடி 'போடா..போடா புண்ணாக்கு போடாதே தப்புக்கணக்கு" என்ற பாடலை பாடிக்கொண்டிருந்தான். அவன் அப்படி பாடியதற்கும் ஒரு காரணம் இருந்தது.

பக்கத்தில் உள்ள தோட்டத்தில் செல்லையா நின்றுகொண்டிருந்தான். சுப்பையாவின் ஏகத்தாளப் பாட்டிற்கு அதுதான் காரணம்.

சுப்பையாவின் பாடலை கேட்க கேட்க செல்லையாவிற்கு உடம்பெல்லாம் கொதிக்கத் தொடங்கியது. செல்லையாவும் பதில் பாட்டு பாடினான். 'நேருக்கு நேராய் வரட்டும் நெஞ்சில் துணிவிருந்தால்" என்ற பாடல்தான் அது.


பாட்டுப் போட்டி தொடர்ந்தாலும் சுப்பையாவிற்கு ஈடு கொடுத்துப் பாட செல்லையாவால் முடியவில்லை. இதனால் கோபம்தான் மேலும் மேலும் கூடியது ''என்னடா நக்கல் பாட்டா பாடுறாய்" என்று முறுகியபடி மாட்டு வண்டிலில் வைத்திருந்த அரிவாளை எடுக்க ஓடினான். அரிவாளில் கை, வைக்கும்போது பக்கத்து தோட்டத்தில் இருந்து ''அம்மா!" என்ற சத்தம் கேட்டது.

சுப்பையா மரத்தால் விழுந்து துடித்துக் கொண்டிருந்தான்.

''அம்மா" என்று சுப்பையா கத்தியது செல்லையாவின் மனதை ஏதோ செய்தது. அன்று சுப்பையாவின் அம்மாவின் கையால் வாங்கிச் சாப்பிட்ட சாப்பாடு தொண்டைக் குழியில் சிக்கி விக்கியதைப்போல் இருந்தது! எடுத்த அரிவாளை எறிந்துவிட்டு சுப்பையாவை நோக்கி ஓடினான். செல்லையா

''டேய் ஓடிவாங்கோடா... நீ, காலிலை பிடி, நீ, தோளிலை புடிச்சு தூக்கு" என்று கூறியபடி தனது மாட்டு வண்டிலில் சுப்பையாவை படுக்க வைத்து ஆஸ்பத்திரிக் கொண்டு செல்ல புறப்பட்டான் செல்லையா. அருகில் நின்றவர்கள் எல்லாம் செல்லையாவை ஆச்சரியமாக பார்த்தார்கள்! ஏழு வருடங்களாக பாம்பும் கீரியும் போல வாழ்ந்த செல்லையா ஒரே நிமிடத்தில் இப்படி மாறறிவிட்டாரே என்று!

இதைத்தான் மனிதம் என்பதோ?





4

# அது ஒரு நிலாக்காலம்

கவிமகன்

துளசியின் தாயாரின் அவசரம் அவளை எதோ உந்தியது. எதுக்கு அம்மா இப்பிடி அவசரப்படுத்துரா...? எதையும் அறிய முடியாத நிலை கேட்கவும் ஒரு மாதிரியாக இருந்தது அவளுக்கு பெரியவர்களிடம் எதிர்த்து கதைப்பதோ அல்லது அவர்களின் சொல் மீறி நடப்பதோ அவளுக்கு தெரியாத ஒன்று சிறுவயதில் இருந்து தாய் தந்தையரின் கண்டிப்புடன் வளர்ந்தவள் அவள் அதனால் அவளால் அந்த காரணத்தை வினவ முடியவில்லை ஆனாலும் மனசு அதை பற்றியே சிந்தித்து கொண்டிருந்தது அதனால் அவளால் மேசை மீது வைக்கப்பட்டிருந்த உணவை அருந்துவது என்பது கடினமானதாக இருந்தது. மதி என்ன சாப்பிடாம யோசிக்கிறா? சாப்பிடம்மா குரல் கேட்டவுடனே அவளது நினைவுகள் சுயநிலைக்கு வந்தன. சரி அம்மா என்று எதோ சாப்பிட முடிந்ததை சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு செல்கிறாள்.

அங்கே சனநடமாட்டம் அதிகமாக இருந்தது. எதோ ஒன்று அங்கே புதிதாக நடக்கிறது என்பது மட்டும் புரிந்தது. அவளது வீடு நறுமணம் என்ற பெயரில் ஏதோ ஒரு வாசம் காற்றில் கலந்துவர புதியவர்கள் பலரால் நிரம்பி இருந்தது. அவளுக்கு எதுவும் புரியாத நிலையில் வீட்டு வாசல் கடந்து பின் பாதையால் வீட்டுக்குள் உள்நுழைகிறாள். அம்மா யாரம்மா இவ்வளவு ஆக்களும் வந்திருக்கினம் சொந்தகாறரா அம்மா. இல்லையம்மா நீ முதல்ல குளிச்சிட்டு வந்து சாறிய கட்டிக்கொண்டு வா தாய் கட்டளை இடுகிறாள். ஏனம்மா? சொன்னத செய் பிள்ள பிறகு எல்லாம் பேசலாம். தாய் அவசரப்படுத்தி கொண்டிருக்க அவளுடன் கூட வந்திருந்த துளசி விடயம் அறிந்து வந்து கூறுகிறான். அக்கா உனக்கு கல்யாணமாம் மாப்பிளை வந்திருக்கார். அவரோட அவரின் உறவுகள் வந்திருக்கினம்.

அவளுக்கு வெக்கம் தலை தூக்கியது. துளசியை கிட்ட அழைத்து என்ன சொல்லுறீங்கள் அக்காவ பொண்ணு பார்க்க வந்திருகினமா? யார் அவர் என்ன செய்யுறாராம்? தெரியவில்லை அக்கா ஆனால் அவர் எங்கயோ வெளிநாடு போல இருக்கிறார். சென்ட் எல்லாம் அடிச்சு நிறைய நகை எல்லாம் போட்டு கொண்டு இருக்கிறார். அவர் தானாம் மாப்பிளை என்று அப்பா சொன்னவர். அவளுக்கு வந்திருந்த வெக்கம் தொலைந்து போனது. சுவரோரம் வந்த அவள் உள்ளே கதைக்கும் குரலை ஒட்டுக்கேட்டாள்.

உள்ளிருந்து கேட்ட குரல் அவனது குரலில் தெரிந்த உறுதி தன்மை அவளை நிலை குலைய செய்திருந்தது. "என்னது ஜேர்மனியா...? " ஜேர்மனி என்ற ஒற்றை சொல்லுக்குள் அவளது அனைத்து எதிர்பார்ப்பு ஆசை வாழ்க்கை எல்லாம் ஒரு புள்ளியில் சுற்றி வந்தது. ஒருபுறம் தனது விருப்பம். மறுபுறம் தன்னை நேசிப்பவர்கள், தான் நேசிக்கும் பள்ளி வேலை, தனது பிறந்த ஊர் என்று அத்தனையும் ஒரு நொடியில் அவளது நினைவு அறைகளில் வந்து சென்றது. அத்தனையையும் தாண்டி, அவள் நினைவுகளை துளசி நிறைத்திருந்தான். தாய் தந்தையை விட அதிகமாக நேசிக்கும் என் தம்பியை விட்டு தூர தேச வாழ்க்கையா.? தனிமையின் கொடுமையில் புருஷனுடனான சில இன்பங்களுக்காக தான் நேசித்த இத்தனையையும் விட்டு பல்லாயிரம் மைல்கள் தாண்டி செல்வதா? குறித்த ஒரு சில வினாடிகளில் அவள் நினைவில் அத்தனையும் வந்து ஒரே புள்ளியில் தாக்குதல் நடத்தியதால் அவள் நிலை குலைந்து போனாள்.


அவளை நிலை குலைய வைத்திருந்தது. அந்த ஒரு வார்த்தை அவள் பிடித்திருந்த துளசியின் கரங்களை இருக்க பற்றி கொள்கிறாள். சுவரில் பிடிமானம் இல்லாது சுயநினைவிழந்து கீழே வீழ்கிறாள். இதை கண்ட துளசி அக்கா என்று வீருட்டு அழுகிறான். வந்திருந்தவர்கள் முதல் பெற்றவர்கள் வரை அனைவரும் திகைப்படைகின்றனர். என்ன நடந்தது? என்ன ஆச்சு குரல்கள் வினாவினாலே அங்கே துளை போட்டு கொண்டிருந்தன தந்தையும் தாயும் அவளிடம் ஓடி வருகின்றனர். வீழ்ந்தவளை தூக்கி கொண்டு மருத்துவ மனைக்கு செல்ல முயன்றனர். ஆனால் அவள் கிடந்த கோலம் அவர்களை எதையும் செய்ய முடியாதவர்களாக மாற்றுகிறது. பெற்றவள் பிள்ளையின் தலையை தூக்கி மடியில் வைத்து கொண்டு அவளது கன்னத்தில் தட்டுகிறாள் "என்னாச்சு செல்லம் என்னடி ஆச்சு" அவளது விழிகள் சொரிந்த நீர் இவளது கன்னத்தில் பட்டுத் தெறிக்கிறது.

வந்திருந்தவர்கள் முணுமுணுக்கத் தொடங்கி இருந்தனர். பலர் பலவற்றை பேசத் தொடங்கி இருந்தனர். என்ன பெட்டை ஏதாவது தப்பு தண்டா பண்ணிட்டுதோ? ஒருத்தி அருகில் இருந்தவளிடம் காதுக்குள் வினவுகிறாள். சீ பிள்ளை நல்லது அப்பிடி இருக்காது பசி மயக்கமா இருக்கும் அடுத்தவள் பதிலுரைக்கிறாள். காரணம் தெரியாது மாப்பிளை முழித்தாலும் அங்கே எழுந்திருக்கும் சலசலப்புக்கு முடிவு கட்டுகிறான். சீ வாய்க்கு வந்ததுகளை பேசாதேங்கோ. கொஞ்ச நேரம் சத்தம் போடாமல் இருங்கள். என்ன என்பதை மருத்துவர் சொல்லுவார் தானே. என்று அவர்களை அடக்கியது மட்டுமல்லாது "மாமா அவாவை கொண்டு போவமே பக்கத்தில தானே குணா டாக்டர் இருக்கிறார். தூக்கி வாங்கோ கொண்டு போவம்." அவன் மாமா என்று உரிமை கொண்டாடியது அப்போது அங்கே இருந்த பலருக்கு முகத்தை சுளிக்க வைத்தது என்னவோ உண்மை ஆனாலும் அவன் படத்தை பார்த்ததில் இருந்தே இவளே தன் துணைவி என்பதில் முடிவாகி இருந்தான்.

இந்த முடிவில் பரிசீலனை செய்ய தொடங்கி இருந்தார்கள் அவனது தாயும் தந்தையும். அருகில் இருந்தவள் அவர்களுக்கு அதுக்கான மணியை அடித்து விட்டிருந்தாள். "அக்கா பெட்ட மயங்கினதை பார்க்க தப்பா தெரியுது ஏதோ சொல்லுறத சொல்லிப்புட்டன்" அவள் ஊதிய நெருப்பு அங்கே புகைய ஆரம்பித்திருந்தது. " டேய் இங்க வா" தாய் அருகில் அழைக்கிறாள். "கிளம்பு போவம் அவையள் தங்கட பிள்ளைய பார்ப்பினம் நீ கிளம்பு "கட்டளையிடுகிறாள் தாய். "என்னம்மா அறிவில்லாத மாதிரி பேசுறீங்க ஒரு பொண்ணு மயங்கி விழுந்து கிடக்கு விட்டிட்டு போக சொல்லுறீங்க மனிதாபிமானமற்று போக என்னால முடியாது நீங்க தேவை என்றால் போங்கோ நான் வாறன் " மகன் கோவத்தின் உச்சத்தில் காதோடு காது பேசுகிறான். இவனது குரல் அவர்களுக்கு கேட்க கூடாது என்றதில் உறுதியாக இருந்தான் அவன்.

அவர்கள் கிளம்பி போய் விடுகிறார்கள். ஆனால் அவன் மாமா நாங்க அவாவை கொண்டு போவம் வாங்கோ மீண்டும் அழைக்கிறான். அவசர அவசரமாக அவளது உடைகளை சரி செய்து தாய் அவளுடன் புறப்பட தயாரான அதே நேரம் தகப்பனின் "மைனர் " ரக கார் தயாராகிறது. அவள் மயக்கத்தில் கிடக்கிறாள் ஆனால் துளசியை பிடித்த கரங்களின் இறுக்கம் கொஞ்சம் கூட குறையாது இறுகி கிடக்கிறது. அந்த இறுக்கம் அங்கே நின்ற அனைவருக்கும் ஒரு உண்மையை உரைத்து கொண்டிருந்தது ஆனாலும் அதை யாரும் புரிந்து கொள்ள கூடிய நிலையில் இல்லை என்பதுவே நியம். அனைவரும் அவளை உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக அழைத்து செல்வதிலே குறியாகி இருக்கிறார்கள். அதனால் அவளின் கரங்கள் துளசியின் கரத்தில் இருந்து வலுக்கட்டாயமாக பிரித்தெடுக்கப்படுகிறது.

துளசி கூட அந்த பிரிவின் அறிகுறி அறியவில்லை அவன் அதை உணரும் வயதிலும் இல்லை அவன் அவள் பற்றி இருந்த கரத்தை ஒரு தடவை பார்த்து விட்டு அக்காவுக்கு ஒன்றும் ஆக கூடாது அக்கா எனக்கு வேணும் அக்கா அக்கா என்று புலம்ப தொடங்குகிறான். கார் வாசலில் தயாராகி நிற்கிறது. அவள் தூக்கி செல்லப்படுகிறாள்...

ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச்சலுகை!

**Direct Booking Nr.**
**0176 21 68 21 49**

CENTURY
TRAVELS



**Transport Service**
nach Frankfur



**CENTURY TRAVELS** GmbH

nach Colombo
**ab 499€**

**Ram Nishanthan**
Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal
0176 21 68 21 49

GUARANTEED BEST PRICE



**Web: www.centurytravels.de | eMail: info@centurytravels.de**

**Hauptsitz:**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225

**Niederlassung:**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
or 0231 58 96 557
Fax: 0231 58 44 665

**Sri Lanka:**
No - 82,
New Chetty Street
Colombo 13
Tel.: 011 2 322 838

சகல நாடுகளுக்குமான விமான பிரயாணச் சீட்டுகள்,
சுற்றுலா ஒழுங்குகளை மலிவாகவும் நேர்த்தியாகவும்
செய்து கொள்ள




- இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு விசேட விலையில் விமானப்பயணச்சீட்டுக்களையும் சுற்றுலா ஏற்பாடுகளையும் செய்து தருகிறோம்
- முன்னணி நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை பேணி நாளாந்த விலைச் சலுகைகளை பெற்று உங்கள் பயணத்தை உங்கள் விருப்பப்படியே அனைத்து வசதிகளுடனும் அமைத்து தருகிறோம்
- இலவச ஆலோசனை, தன்னிகரற்ற வாழக்கயாளர் சேவை

**நம்பிக்கை | தரம் | மலிவு | சிறந்த மக்கள் சேவை**

## KRISH TOURS & TRAVELS AG, ZURICH

சுவிஸ் மற்றும் சர்வதேச தர நிர்ணய நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றது

REISEGARANTIE | SRV FSV Schweizer Reise-Verband Fédération Suisse du Voyage Federazione Svizzera di Viaggi | hweiz Tourismus. Mitglied | IATA Accredited Agent

KRISH TOURS & TRAVELS AG
Waisenhausstrasse 5, 8001 Zürich

Phone: 044 808 98 00
Email : info@ktsswiss.ch

Monday - Friday: 09:00h - 19:00h
Saturday: 09:00h - 16:00h

**Call: 044 808 98 00 | www.ktsswiss.ch**

*Preise inkl. Taxen und Zuschläge in der günstigten Buchnungsklasse



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
தளபதி
விஜய்
நடிக்கும்
GET
2
FREE
TICKETS
*T&C Apply
WHEN YOU BUY A NEW STB
விஜய்
தமிழ்
KTV
ENTKOTTA + EROSNOW
7000க்கும் அதிகமான புத்தம்புதிய
TAMIL & HINDI திரைப்படங்கள்
மெர்சல்
ஒரு வருட இணைப்புச் சந்தா
€99
SET TOP BOX INCLUDED
- FRANCE -
036 967 2151
- GERMANY -
069 1200 7102
www.lycatv.tv